Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/797)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 28 புதன்கிழமை (13.07.2011) பக்கங்கள் 16 ஓசை – 287




பேச்சாற்றலை வளர்க்க புதிய வழி 04





யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் வரலாற்றுச் சாதனை 06



மனச தேவி அம்மனுக்கு திருவிழா 11

# அமைச்சர் டக்ளஸ் கிராமியப் பயணம்

## சென்ற இடம் எல்லாம் மக்கள் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கிராமிய மக்களின் குறை, நிறைகளைக் களைவதற்கும் அவர்களின் வாழ்வியல் தேவைகளை நிறைவு செய்வதற்குமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கிராமிய சூறாவளிச் சுற்றுப் பயணம் நேற்று இரண்டாவது நாளாக வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்றது.

நேற்று மாலை வடமராட்சி கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் துவிச்சக்கர வண்டிகளில் தமது கிராமியப் பயணத்தை மேற்கொண்டனர்.

நேற்று மாலை 4 மணியளவில் நெல்லியடியில் ஆரம்பித்த இந்த கிராமியப் பயணம் நெல்லியடி பஸ் நிலையம் ஊடாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மற்றும் வதிரிச் சந்தி ஊடாகத் தேவரையாளிக் கிராமம் வரை சென்றனர். அங்குள்ள நரசிங்க கோயிலுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர். பின்னர் சிறுநாத வீதியில் முருகன் ஆலயத்திற்குச் சென்று வருடாந்த பூசைகளுக்காக ஒரு தொகை நிதி உதவியை அமைச்சர் வழங்கினார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்ட அமைச்சர் குழுவினர் மாலுசந்தி, முடக்காடு, அரசடிச் சந்தி, அம்பன் ஆஸ்பத்திரி ஆகிய பகுதிகளூடாக இராஜ கிராமத்தைச் சென்றடைந்தனர்.

இவ்வாறு கிராமங்களை ஊடறுத்து சந்து வீதிகளுக்கூடாகச் சென்ற அமைச்சர் தலைமையிலான குழுவினர் ஒவ்வொரு பகுதிகளிலும் பொதுமக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

கிராமிய வீதிகளில் சிறியோர் முதல் பெரியோர் வரை மக்கள் திரள்திரளாகக் கூடிநின்று அமைச்சரை அன்புக்கரம் நீட்டி வரவேற்றனர். அங்கு துள்ளித்திரிந்த சிறார்களுக்கு அமைச்சர் இனிப்புப் பண்டங்களை வழங்கி அன்பைப் பகிர்ந்துகொண்டார்.

அமைச்சர் சென்ற இடம் எல்லாம் மகக்கள் கூடி தமது ஆதரவைத் தெரிவித்தனர். நேற்று முன்தினம் இதேபோன்ற கிராமியப் பயணம் தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்றபோது நூற்றுக்கணக்கில் மக்கள் திரண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர். இந்த கிராமியப் பயணத்தில் தேர்தல் வேட்பாளர்களும் பொது மக்களும் இணைந்து கொண்டனர். ஏனைய பகுதிகளுக்கும் இக்கிராமியப் பயணம் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (109)



## வெளிவாரிப் பட்டப்படிப்பு நிறுத்தம் அறுபதாயிரம் மாணவர்கள் பாதிப்பு

வெளிவாரி பட்டப்படிப்புக்கான பதிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் வருடாந்தம் 60,000 மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரும் வாய்ப்பை இழப்பதாக வெளிவாரி பட்டப்படிப்பு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வருடாந்தம் குறைந்தபட்சம் 60,000 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கான இஸட் புள்ளிகளைப் பெறத் தவறுவதாக மேற்படி மத்திய நிலையத்தின் ஏற்பாட்டாளர் கே.பி. சோமசிறி கூறினார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## பாடவிதானத்தில் இடம்பிடிக்கிறது கண்ணிவெடி விழிப்புணர்வுக் கல்வி

வடக்கு கிழக்கு பாடசாலை மாணவர்களுக்கு நிலக்கண்ணிவெடி குறித்து விளக்கமளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. யுத்தம் இடம்பெற்ற வலய பாடசாலைகளின் பாடவிதானத்தில் நிலக்கண்ணிவெடி குறித்த பாடமும் இணைக்கப்பட உள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு இந்த பாடம் நடைமுறையில் இருக்கும் எனவும் நிலக்கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பில் தெளிவு (15 ஆம் பக்கம் பார்க்க)

## வானொலி பரிவர்த்தனை நிலையம் புத்தூரில் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தொலைத் தொடர்பு மற்றும் ஒலிபரப்புப் பரிவர்த்தனை நிலையமொன்று கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவின் புத்தூர் பகுதியில் அமைக்கும் நடவடிக்கையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் முதலியவற்றை யாழ்.குடாநாட்டில் துல்லியமாகக் கேட்கவும், அதன் மூலம் பொதுமக்களுக்கு அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான செய்திகளை அறிந்துகொள்வதற்கும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச கண்காணிப்பு கூட்டமைப்பு கோருகிறது

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் வேண்டும் என்று கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. தேர்தல் வன்முறைகள் அதிகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவதாலும் நியாயமான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கும் மேற்படி வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் பணிக்கமர்த்தப்படுவது அவசியம் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பி.பி.சி இன் சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

**மாணவச் செல்வங்களே**

☞ உள்ளே கல்வி முரசு
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி II இன் வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் பசில் இன்றும் யாழில் சூறாவளிச் சுற்றுப் பயணம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இன்று காலை ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் பொதுமக்களைச் சந்திக்கவுள்ள அமைச்சர் "திரியபியச்" வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்தல், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கான (15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.செயலகத்தில் ஊடகப்பிரிவு

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் விசேட ஊடகப்பிரிவு கடந்த சனிக்கிழமை முதல் இயங்கிவருவதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ் செயலகத்தில் ஏற்கனவே இயங்கிவந்த அரசாங்கத் தகவல் திணைக்களம் கடந்த பல வருடங்களாக செயற்பட வல்லை அதன் அதிகாரியும் அங்கிருந்து (15 ஆம் பக்கம் பார்க்க)

# நீதிமன்றச் செய்திகள்

## நகை மோசடி வழக்கு தொடரும் விசாரணை

பல இடங்களில் நகைகளை மோசடி செய்த வழக்கில் திருகோணமலை பெண் ஒருவருக்கு எதிராக சாவகச்சேரிப் பொலிஸாரினால் தொடரப்பட்ட வழக்கில் மேலும் ஒரு சந்தேக நபர் சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபரைப் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுத்திய போது சந்தேக நபரை எதிர் வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (11)

## வீதி ஒழுங்கு மீறல்; தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப்பகுதியில் வாகனம் நிறுத்தத் தடை செய்யப்பட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்திய நபர் ஒருவருக்கு எதிராக யாழ்.நீதிமன்றம் குற்றப்பணமாக 2 ஆயிரம் ரூபா விதித்து தீர்ப்பளித்தது.

நேற்று யாழ்.நகர்ப் பொலிஸாரினால் யாழ்.நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கினை விசாரணை செய்த மேலதிக நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபருக்கு 2 ஆயிரம் ரூபா குற்றப்பணமாகச் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் இரண்டு மாதம் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார். (பா)

## அளவுக்கதிகமான பயணிகள் பஸ் நடத்துநர் மீது வழக்கு

யாழ்.நகரப் பகுதியில் அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற பயணிகள் பஸ் வண்டியின் நடத்துநருக்கு எதிராக யாழ்.பொலிஸார் யாழ்.நீதிமன்றத்தில் வழக்கொன்றை நேற்றுப் பதிவு செய்தனர்.

இவ்வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதிமன்றம் குறித்த நடத்துநருக்கு 1000 ரூபா குற்றப்பணம் விதித்ததுடன், அதனைக் கட்டத் தவறின் ஒரு மாத காலம் சாதாரண தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. (பா)

## சட்டவிரோத சாராய விற்பனை யாழ்.நகரில் தண்டம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்து வந்த நபர் ஒருவருக்கு எதிராக யாழ்.நீதிமன்றம் 3 ஆயிரம் ரூபா குற்றப்பணம் விதித்ததுடன், அதனைச் செலுத்தத் தவறின் மூன்று மாத காலம் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமெனத் தீர்ப்பளித்தது.

யாழ்.பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கினை யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் அன்னலிங்கம் பிரேமசங்கர் விசாரணை செய்து மேற்படி தீர்ப்பினை வழங்கினார். (பா)

# ‘எல்லோருக்கும் போஷாக்கு’ பச்சிலைப்பள்ளியில் கண்காட்சி



(பச்சிலைப்பள்ளி)

‘எல்லோருக்கும் போசாக்கு’ எனும் தலைப்பில் பச்சிலைப் பள்ளி - புலோப்பளை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியினை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் நாடாவினை வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

நேற்றுக்காலை 09.30 மணிக்கு ஆரம்பமான இக் கண்காட்சியில் ஆரோக்கியமான மனித வாழ்வுக்கு அவசியமான போசாக்குள்ள உணவு முறைகள் பற்றி மாணவர்களால் பார்வையாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. பச்சிலைப்பள்ளி பிரதேச வைத்தியசாலை தரப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக் கண்காட்சியில் பளைப்பிரதேச வைத்திய அதிகாரி செல்வி. மைதிலி, பாடசாலை அதிபர், சுகாதார தொண்டர்கள், பாடசாலை மாணவர்கள், மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## கல்விப் பணிமனைக்கு கட்டட வசதி இல்லை

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனை நிரந்தரக் கட்டடம் இன்றி கிளிநொச்சி சிங்கள மகாவித்தியாலயத்தில் மிகுந்த இட நெருக்கடியின் மத்தியில் தனது செயற்பாட்டினை மேற்கொண்டு வருகிறது.

கிளிநொச்சி பரந்தனில் வலயக் கல்விப் பணிமனைக்குரிய நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான காணி இனங்காணப்பட்டுள்ள போதிலும் யுத்தம் காரணமாக அவ்விடத்தில் வலயக் கல்விப் பணிமனையினை அமைக்க முடியாது போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (121)

## தவணைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயப் பாடசாலை மாணவர்களுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

இப்பரீட்சைக்கான வினாத்தாள்களைச் சகல பாடசாலை அதிபர்களும், வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எஸ்)

# கொக்காவில் சந்தியில் விபத்து பஸ் வண்டிகள் சேதம்; பலர் காயம்



(மாங்குளம்)

மாங்குளம்-கொக்காவில் பகுதியில் மூன்று பேருந்துகள் ஒரே சமயத்தில் மோதிக்கொண்டன. இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் இடம் பெற்றது.

கண்டியிலிருந்து யாழ் நோக்கி வந்து கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியும் முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த பஸ் வண்டியும் ஒன்றுடன் ஒன்று நேருக்குநேர் மோதியுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, கண்டியிலிருந்து வந்த பஸ் பயணிகளை இறக்குவதற்காக சந்தியில் நின்றது. அதற்கு எதிரே வவுனியா செல்லும் பஸ் அருகில் வந்தபோது இரண்டுக்கும் மத்தியில் பருத்தித்துறை பஸ் செல்ல முற்பட்ட போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், மூன்று பஸ்களும் சேதமடைந்துள்ளதுடன், அதில் பயணம் செய்த சிலருக்கு தலை, நாடிப் பகுதியில் காயமேற்பட்டதுடன் உடல் பகுதிகளில் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த விபத்தினால் சுமார் அரை மணித்தியாலம் வரை அப்பகுதியினூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன், அங்கு விரைந்த இராணுவத்தினர் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தினர். (12)

## காணிகள் பகிர்ந்தளிப்பு

அக்கராயன் குளம் புனரமைக்கப்பட்டு வருவதால், முல்லைத்தீவு அமைதிபுரம் கிராமத்தில் மேற்படி குளத்தினால் வெள்ள அபாயத்தை எதிர்நோக்கி இருந்த குடும்பங்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு குடும்பத்துக்கு அரை ஏக்கர் வீதம் துணுக்காய் பிரதேச செயலகத்தால் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக அமைதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.(121)

## காசுக்கான வேலை பளைப் பகுதியில் அமுல்

வன்னியில் மீளக்குடியேறிய மக்களுக்கு உடனடி உணவு மற்றும் வாழ்வாதார உதவித் திட்டத்தை சேவா லங்கா நிறுவனம் நிறைமுறைப் படுத்தி வருகிறது. இதன் ஒரு கட்டமாக பளைப் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்கான இந்த உதவித்திட்டம். காசுக்கான வேலைத்திட்டத்தின் மூலம் நடை முறைப்படுத்தப்படுகிறது.

மீள்குடியேறிய பகுதிகளில் இனங்காணப்பட்ட வீதிகளைப் புனரமைத்தல், சிறு குளங்களையும், வாய்க்கால்களையும் ஆழப்படுத்துதல் போன்ற பல வேலைகள் கிராமங்களில் உள்ள மக்களின் மூலம் செய்யப்படுகின்றன.

## கிளிநொச்சி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ நேற்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆறு பாடசாலைகளுக்கு விஜயம் மேற்கொண்டு மாணவர்களுக்கான உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இதில் கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி மத்திய கல்லூரி, புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம், ஜெயந்திநகர் இந்து வித்தியாலயம், புனித திரேசாள் பெண்கள் கல்லூரி, கனகபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்குச் சென்று அங்குள்ள மாணவர்களுக்கு சகல பாடத்துக்கான உபகரணங்களையும், விஞ்ஞான பாடத்துக்கான ஆய்வுகூட உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

இதன்பின்னர், மேற்படி பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்களுடன் பாடசாலையின் குறைபாடுகள், வளப்பற்றாக்குறை விடயங்கள் குறித்துக் கலந்துரையாடியதுடன், அவற்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினருடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளர் கீதாஞ்சலி மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (77)

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி



வேலணை மேற்கு தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும், 35/14 A, கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி 12.07.2011 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சுப்பிரமணியம் (நொத்தாரிஸ்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் பத்தினிப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா, விசாலாட்சி அவர்களின் மருமகளும், திருமதி ஆ.கீதா (ஆசிரியை யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்) அவர்களின் ஆசையம்மாவும், ப.ஆரூரன் (ஆசிரிய ஆலோசகர், தீவகக்கல்வி வலயம்) அவர்களின் மாமியாரும், காலஞ்சென்ற புனிதவதி நமசிவாயம், புவனேஸ்வரி இலிங்கப்பிள்ளை, சரஸ்வதி நவரட்ணசிங்கம், மகேஸ்வரி சிவானந்தன், பாலசுப்பிரமணியம் (கணக்காளர் U.K), நிலாவதி நகுலேசபிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சியாமளா கருணைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, இராசம்மா, நடராசா மற்றும் நல்லையா, சந்திராம்பாள் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை, கமலேஸ்வரி, பாலசரஸ்வதி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், கௌசியா, துசியா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13.07.2011) புதன்கிழமை பி.ப.3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ப.ஆரூரன்
(ஆசிரிய ஆலோசகர்,
தீவகக் கல்வி வலயம்)

4ம் ஒழுங்கை,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (128)

கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் தேர்வில் வெற்றிபெற வேண்டுமென்ற குறிக்கோளுடன் படிக்கக்கூடாது. அவர்கள் மாணவர்களாக இருக்கும்போதே, பொது அறிவை நன்கு வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான்அவர்களும் பயன்பெறுவர். இந்த நாடும் பயன்பெறும்.

குன்றக்குடி அடிகளார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## வீரவசனம் நிறுத்தி யதார்த்தம் உணர்க!

நிலவைப் பற்றிக் கேட்டால், அதிலுள்ள கறையைப் பற்றியே சிலர் பேசிக் கொண்டிருப்பார்கள். ரோஜா பூத்திருப்பதைப் பார்க்கச் சொன்னால், அதிலுள்ள முட்களையே பார்த்து முகம் சுளித்துக் கொண்டிருப்பார்கள். வெங்காயம் நறுக்கும் கத்தியைக் கூட, 'ஐயையோ, இது கொலை செய்யப் பயன்பட்டுவிடுமே' என்று கூக்குரலிட்டுக் கொண்டிருப்பார்கள்.

நல்லவை நடப்பதைக் கண்டுகொள்ளாமல் இருப்பது அல்லது அதுபற்றி நொட்டையோ புறணியோ சொல்லிக் கொண்டிருப்பதென்பது ஒருவகை நோய். இந்த நோய் சிலருக்கு இயல்பாகவே அமைந்து விடுகிறது. வேறுசிலரிடம் தங்களது சுயநல ஆசைகளுக்காக அவர்கள் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கும் தந்திரமாக இருக்கிறது.

போர்ச்சூழல் காரணமாக இதுகாலவரை பொதுமக்கள் பயன்படுத்த மறுக்கப்பட்டு வந்த வீதிகள் பொதுமக்கள் பாவனைக்காக ஒவ்வொன்றாகத் திறந்துவிடப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு வலயங்களாகத் தடுக்கப்பட்டிருந்த பிரதேசங்களில் பெருமளவு பகுதிகளில் மக்கள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள்; மேலும் மேலும் அவ்வாறான உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகள் தளர்த்தப்பட்டு மக்கள் குடியேற அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள்.

நாடுகடந்த அரசாங்கம், தேர்தல், மந்திரிசபை என்று கோமாளிச் சண்டித்தனத்தோடு கூத்துகளை ஆடிக்கொண்டிருப்பவர்கள் வெளியிலுள்ள ஒருசிலர்தான், அவர்களுக்காக பெரும்பாலான நமது உறவுகள் பாதிக்கப்பட வேண்டாம் என்ற கரிசனையோடு பாஸ் நடைமுறைகள் நீக்கப்படுகின்றன. கடற்தொழிலுக்கு இருந்த தடைகள் நீக்கப்படுகின்றன. அழிந்த வளங்கள் மீளக் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன. மனைப்பொருளாதாரம், இளைஞர் தொழில் முயற்சிகள், மக்களின் வாழ்வாதாரத்திற்கென நடைபெற்று வரும் திட்டங்கள் செயற்பாடுகள் என நாளும் பொழுதும் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் கண்ணும் மனசாட்சியுமுள்ள யாருக்கும் தெரியாமல் போகாது.

ஆனால், மக்கள் எந்த வசதிகளையும் பெற்றுவிடாமல், கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தால்தான் 'வீரவசன' அரசியலைச் செய்யமுடியும், கதிரைகளும் அறிக்கைகளுமாகக் காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்க முடியும் கருதுபவர்களுக்கோ இந்த மாற்றங்கள் எவையும் நடைபெற்றுவிடக் கூடாது என்ற அங்கலாய்ப்பில் புதிது புதிதாய்க் குறைகள் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டிருப்பதே பொழுதாய்க் கழிகிறது.

மக்களுக்கு மகிழ்ச்சி திரும்பிவிடக் கூடாது, வாழ்வாதாரங்கள் கிடைத்துவிடக் கூடாது என்று எதிர்மறையான முயற்சிகளையும், 'போராட்டம் வெடிக்கும்' ஜோக்குகளையும் பேசிவரும் இவர்கள், தங்களது குழப்பல் பேச்சுக்களையும் மீறிக் காரியங்கள் நடைபெற்று விடுகிறபோது, அதற்கு முந்திக்கொண்டு, 'நாங்கள் குரலெழுப்பியதால்தான் இது நடந்தது' என்று காட்டிக்கொள்ள உன்னுகிறார்கள்.

சமீபத்தில் வடமராட்சி கிழக்கு பாதை திறப்பின்போது, பின்னணியில் நிகழ்ந்த சுவாரசியங்கள் பலருக்கும் தெரிந்திருக்காது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டதற்கிணங்க, அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஜூலை 4 ஆம் திகதி பாதையைத் திறந்து வைப்பதற்கு வர நாள் கொடுத்திருந்தார். அதன்படியே ஜூலை 2 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து பல்வேறு மக்கள்நலத் திட்டங்களில் கலந்துகொண்ட அமைச்சர் பஸில், 4 ஆம் திகதி அவசரமாகக் கொழும்பு திரும்ப வேண்டியிருந்தது. எனவே, பாதை திறப்பு நிகழ்வை 7 ஆம் திகதிக்கு ஒத்திப்போட முடியுமா என அமைச்சர் டக்ளஸிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

இதை எப்படியோ மோந்து பிடித்துக்கொண்ட 'குறைகண்டு பிடிக்கும்' அரசியல் கட்சியினர், பாதை திறப்புக்கு முன் 4 ஆம் திகதி நாகர்கோவிலில், "அரசே! வடமராட்சி கிழக்கு பாதையைத் திற" என்று கோஷத்தோடு ஒரு பத்திரிகைச் செய்தியை உருவாக்க அவசரத் திட்டம் போட்டனர். அதாவது, தங்கள் 'போராட்டம் வெடித்த'தால் தான் அரசு பயந்துகொண்டு பாதையைத் திறந்தது என்று வழக்கம் போல பத்திரிகைகள் மூலமாக உலகுக்குக் காட்டுவதே திட்டம்.

ஆனால், இதை அறிந்துகொண்ட அமைச்சர் பஸில், இவர்களது தந்திர நாடகத்திற்கு இடமளிக்கக் கூடாதென்று ஜூலை 3 ஆம் திகதியே பாதையைத் திறந்து வைத்துவிட்டுப் பயணமானார். அங்கு பேசும்போது இவர்களது மக்கள்விரோத குறுகியலாப அரசியலையும் வங்குரோத்தையும் அமைச்சர் கிழி கிழியென்று கிழித்துவிட்டே சென்றார்.

இப்படி எல்லா வகைகளிலும் அம்பலப்பட்டு வரும் இவர்களது குறைகண்டுபிடிப்பு அரசியலை நிறுத்திவிட்டு, மக்களை வாழ வைக்கும் அரசியலுக்கு இவர்கள் முன்வரவேண்டும். திரும்பத் திரும்பக் கஷ்டங்களுக்கும் வாழ்வழிப்புக்கும் தூண்டும் வீரவசனங்களை நிறுத்தி யதார்த்தமுணர வேண்டும். வாழ்வுக்கு ஏங்கி வதங்கும் மக்களது அல்லல்களை நீக்கி அரசியற் தீர்வுக்கு மேற்செல்ல, ஏகப்பிரதிநிதித்துவப் பம்மாத்தை விட்டு எல்லோருடனும் கைகோர்க்க வேண்டும்.

- ஆசிரியர்

# வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு




(கிளிநொச்சி)

கிளிநொச்சி வர்த்தகர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் கிளிநொச்சியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

வர்த்தகர்களின் தேவைகள், பிரச்சினைகள் என்பவற்றை கேட்டறிந்து தீர்வுகாணும் வகையில் இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், வர்த்தகர்கள் தற்போது இயல்பாக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், வர்த்தகர்களின் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து விட்டதாக இல்லை. ஆனால் அவை அனைத்தும் நிரந்தரமாக நீடிக்கப்போவதும் இல்லை எனத் தெரிவித்தார்.

அரசு போரினால் பாதிப்படைந்த பிரதேச வர்த்தகர்களின் நலனில் அதிக அக்கறை கொண்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் வர்த்தகர்களின் முன் எந்த தடைகளும் இருக்கப்போதில்லை.

அத்தோடு, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வர்த்தகர்கள் எடுக்கும் தீர்க்கமான முடிவும் அவர்களை மேலும் பலப்படுத்தும் எனத்தெரிவித்தார்.

# யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் யாழ். வலய அழகியல் பாடக் கண்காட்சி நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர் ராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியை நாடாவெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் மாகாண அழகியல் கல்விப் பணிப்பாளர் திருமதி பற்குணம், யாழ். கல்வி வலய முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.சற்குணராசா மற்றும் சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடங்களின் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கண்காட்சியில் யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் கலைத்திறனை வெளிப்படுத்தும் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றைப் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் பார்வையிட்டனர். (எஸ்)

# அக்கராயன் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்திற்கு நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் 79 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான வாழ்வாதார கடனுதவிகள், சிறுவீதி புனரமைப்புகள், முன்பள்ளி புனரமைப்பு பொது மண்டபம் அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக வாழ்வாதார கடனுதவிகள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. (121)

# மகியங்கனையில் கூரைபிரித்து நகைகள், பணம் கொள்ளை

(மட்டக்களப்பு)

மகியங்கன கெசல்பொத்த பிரதேசத்திலுள்ள பொலிஸ் உத்தியோஸ்தர் ஒருவரின் வீட்டு கூரையைப் பிரித்துக்கொண்டு உள்நுழைந்த கொள்ளையர்கள் 1,80,500 ரூபா பெறுமதியான பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வேளையில் வீட்டில் பொலிஸ் உத்தியோஸ்தரின் மனைவி உறக்கத்தில் இருந்த வேளையிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற வேளையில் பொலிஸ் உத்தியோஸ்தர் பதியத்தலாவ பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்துள்ளதாக மகியங்கன பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மகியங்கன பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 90 ஆவது ஆண்டு விழா

(பருத்தித்துறை)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய தொண்ணூறாவது ஆண்டு விழா எதிர்வரும் 15, 16, 17 ஆம் திகதிகளில் பிற்பகல் 2.00 மணி முதல் கல்லூரிக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி அதிபர் செ.சேதுராஜா தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியல் துறை தலைவர் கலாநிதி சி.ஸ்ரீசற்குணராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வின் பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியாரும், யாழ். பல்கலைக்கழக மொழியியற்துறை தலைவருமான திருமதி சிவராணி ஸ்ரீசற்குணராஜா வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

இரண்டாம் நாள்:

இம்மாதம் 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இரண்டாம் நாள் நிகழ்வு அதிபர் செ.சேதுராஜா தலைமையில் பரிசளிப்பும் கலைநிகழ்வுகளும் கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு விழாவைச் சிறப்பிக்கவுள்ளார். இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் வே.தி.செல்வரத்தினமும், யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார், வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) சி.நந்தகுமார், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (109)

## தையல் பயிற்சி வகுப்பு

(யாழ். நிருபர்)

காரைநகரில் நடைபெற்று வரும் தையல் பயிற்சி வகுப்புக்களின் இரண்டாவது பயிற்சி நெறி அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

இத்தையல் பயிற்சி வகுப்பில் தற்போது வறுமைக் கோட்டிற்குப்பட்ட குடும்பங் களைச் சேர்ந்த 40 மாணவிகள் பயிற்சி பெற்று வருகின்ற னர். (10)

## நெற்செய்கை இடை நிறுத்தம்; நிவாரணம் வழங்கக்கோரிக்கை

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி - அக்கராயன் குளத்தின் புனர மைப்புப் பணிகள் நடைபெற்று வருவதால் இக் குளத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழான சிறு போக நெற் செய்கை இடை நிறுத்தப்பட்டுள்ள நிலையில், மாற்றீடாக தமக்கு நிவாரண உதவி களை வழங்கி உதவுமாறு அப்பிரதேச மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது சிறுபோக நெற்செய்கை இடம் பெறாத நிலையில், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பிரதேச மக்கள் கவலையும் தெரிவித்தனர்.

இதைவிட அக்கராயன் பாலங்குளத்தையும் முழுமையான புனரமைப்புக்கு உட்படுத்தி, விவ சாய முயற்சிகளுக்கு வழி வகை செய்யுமாறு அக்கராயன் பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ள னர். (121)

## கவிதை நூல்களின் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு முகிலனின் 'பயணிகள் கவனத்திற்கு', 'கடவுளின் சயனத்தை கலைக்கும் மணியோசை' ஆகிய இரு கவிதை நூல் களின் அறிமுக விழா நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை மாலை 4.15 மணிக்கு நெடுந்தீவு மணற் கடற்கரை ஓரத்தில் நடை பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை பனை தென்னை அபிவிருத்திச் சங்க பொதுமுகாமையாளர் வை.ச. ஜெயபாலன் தலை மையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தென்னிந்திய திரைப்படத் தயாரிப்பாளர் க. செவ்வேள் பிரதம விருந் தினராகவும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஆ. சிறி, ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவு அமைப்பாளர் தானியேல் றெக்சியன் ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாகவும், கௌரவ விருந்தினர்களாக சுபாசினி வீரசிங்கம், நன்னிப்பிள்ளை மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல்களின் முதற்பிரதி களை நெடுந்தீவு ஓய்வு பெற்ற அதிபர் ஜெயவதி கணேசன் மற்றும் நெடுந் தீவு ஓய்வுபெற்ற கிராம சேவகர் வ. நடராசா ஆகி யோர் பெற்றுக்கொள்ள வுள்ளனர்.

# இலக்கியப் புலமையில் பேச்சாற்றலை வளர்ப்பதற்கே பாடசாலைகளில் சொல்லாடுகளம் நடத்தப்படுகின்றது

## கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

யாழ். மாவட்டப் பாடசாலை களின் உயர்தர வகுப்பு மாண வர்களிடையே இலக்கியப் புல மையை ஏற்படுத்தும் பேச்சாற் றலை வளர்க்கும் நோக்குடன் சொல்லாடுகளம் நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. க.பொ.த. உயர்தர வகுப்புகளில் தமிழ்ப் பாடத்தைக் கற்கும் மாணவர் கள் இதனைப் பயனுள்ள விதத் தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஜப்பான் கச்சுயின் பல்கலைக்கழக வருகை விரி வுரையாளர் முனைவர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் குறிப்பிட்டார்.



யாழ்ப்பாணம் மத்திய கல் லூரி கலை மாணவர் மன்றம் நடத்திய சுழலும் சொல்லாடு களமும் இறுவெட்டு வெளி யீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கலை மாணவர் மன்றத் தலை வர் செல்வன் யூட் கிசாந்தன் தலைமையில் கடந்த சனிக் கிழமை மாலை யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் மனோன் மணி சண்முகதாஸ் தொடர்ந் தும் பேசுகையில்,

புலமை சார் அறிஞர்கள் பங்கு கொள்ளும் இந்நிகழ்வு களினூடாக மாணவர்கள் சிறந்த இலக்கியப் புலமையி னைப் பெற்றுக் கொள்ள முடி யும். எனவே, இத்தகைய நிகழ் வுகளில் மாணவர்கள் பெருமள வில் கலந்து கொண்டு பயன் பெற வேண்டுமெனக் குறிப் பிட்டார். (10)

## விற்பனை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட மகளிர் உற்பத்திப் பொருட்களின் சந்தை வாய் ப்பை அதி கரிக்கும் நோக் குடன் யாழ். மகளிர் உற்பத்தி விற்பனை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இவ்விற்பனை நிலையம் நாளை காலை 10.00 மணிக்கு இல: 18, சீனியர் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம் என் னும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளதாக நிறை வேற்றுப் பணிப்பாளர் ச. செந்துராசா அறிவித்துள்ளார்.

## துரித கதியில் இடம்பெறும் வாக்காளர் அட்டை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெறுவதாக யாழ். மாவட்ட தபால் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த வாக்காளர் அட்டைகள் காலை தொடக்கம் மாலை வரை விநியோகிக்கப்படுவதாக அவ் அதிகாரி தெரிவித்தார்.

வாக்காளர் அட்டையுடன் வேட்பாளர் பட்டியலும் சேர்த்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் எதிர்வரும் 18ஆம் திகதியுடன் முடிவுற்ற பின்னர் அவற்றை அந் தந்த தபாலகங்களில் 23ஆம் திகதி வரைக்கும் விநியோகிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

## கிராம மட்டக்குழுக்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தி லுள்ள இராமநாதபுரம் பகுதி யில் கிராம மட்ட குழுக்களுக் கான தலைமைத்துவப் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி கிராம மட்டத்தில் செயற்பட்டு வரும் குழுக்களை வலுப்படுத்தும் வகையில் இராமநாதபுரம், கல்மடுநகர் போன்ற பகுதிகளை உள்ளடக் கிய குழுக்களை ஒன்று திரட்டி அவர்களுக்கான தலைமைத் துவப் பயிற்சிப் பட்டறை அண் மையில் 'சோஆ' நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுள்ளது.

இராதநாதபுரம் அ.த.க. பாட சாலையில் நடைபெற்ற இப் பயிற்சிப் பட்டறையில் 100இற் கும் மேற்பட்ட கிராம மட்டக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர். (110)

## காவலரண்கள் அகற்றப்படுகிறது

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு - பாண்டியன குளம் பகுதியில் முக்கிய இடங்களில் இருந்த இராணு வக் காவலரண்கள் படிப்படி யாக அகற்றப்பட்டு வருவ தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாலையடிப் பிள்ளையார் ஆலயம், முனீஸ்வரர் ஆல யம், நட்டாங்கண்டல் பொது மயானம் ஆகிய இடங்களில் இருந்த இராணுவக் கால வரண்கள் தற்போது அகற் றப்பட்டுள்ளன.

கடந்த 2009ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேற்றம் செய் யப்பட்டபோது இருந்த காவல ரண்கள் தற்போது முழுமை யாக அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

படிப்படியாக ஏனைய இடங்களிலும் காவலரண்கள் அகற்றப்படும் எனவும் தெரி விக்கப்படுகின்றது. (110)

## மன்னார் - பேசாலையில் ஐஸ் தொழிற்சாலை திறப்பு

மன்னார் பேசாலையின் ஐஸ் தொழிற்சாலை ஒன்று கடற் றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன வினால் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் தலைவர் மகில் சேனாரத்ன, மன்னார் மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் உதவிப் பணிப்பாளர் மெராண்டா, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன், மன்னார் பிரதேச செயலாளர் ஸ்ரான்லி டி மெல், இராணுவ பொலிஸ் அதி காரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர் இதன்போது கடல் உணவுப்பொருட்களை குளிரூட்டி வைக்கும் கட்டடமும் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கிலிருந்து தெற்குநோக்கி புதிய பஸ் சேவை ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திரமுனைக்கு நடை பெற்றுவரும் இ.போ.ச. பஸ் சேவைக்கு ஒரு வழிக் கட்டண மாக எழு நூற்று எழுபத்தொரு ரூபா அறவிடப்பட்டு வருவதாகப் பருத்திததுறை இ.போ.ச. சாலை முகா மையாளர் கே.குகபால செல்வம் தெரிவித்தார்.

இச் சேவைக்கான ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை களுததுறையில் சம்பிரதாய பூர்வமாக நடைபெற்றது.

தமிழ், சிங்கள ஒற்றுமையை வளர்க்கும் பொருட்டு இப்புதிய சேவையை பருத்தித்துறை இ.போ. ச.டிப்போ ஆரம்பித்துள் ளது. இப்புதிய சேவைக்கென இரு புதிய பஸ் வண்டிகள் லீசிங் அடிப்படையில் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவினால் கொள் வனவு செய்யப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (109)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை வீரமாகாளி அம் மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நாளை வியாழக் கிழமை காலை இடம்பெற வுள்ளது.

இதில் காலை வசந்த மண் டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் தேரில் ஆரோகணிக் கும் காட்சியும் இடம்பெறவுள்ள துடன், மறுநாள் காலை தீர்த் தோற்சவமும் இடம்பெறவுள் ளது.





யாழ். மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற அழகியல் கண்காட்சியில் மாகாண அழகியல் கல்விப் பணிப்பாளர் திருமதி பற்குணம் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் விருந்தினர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் நிற்பதையும், கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட ஆக்கங்களையும் காணலாம். (படம் : சுமித்தி)

# இன்றைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்திற்குள் அழிந்துபோன எம் தேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம்



## – ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்

(கிளிநொச்சி)

இன்றைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திற்குள் அழிந்துபோன எம் தேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம் என ஈ.பி. டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பரந்தன் மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பரந்தன் பகுதி மக்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், முடிவடைந்த மிகக் கொடிய யுத்தத்தின் வடுக்களை சுமந்தபடி வாழும் எம்மக்களுக்கு மீள்வாழ்வளிக்கும் மிகப் பெரும் பொறுப்பை இன்று நாம் ஏற்று செயற்பட்டு வருகின்றோம். இதற்காக அரசாங்கம் பெருமளவான நிதியினை இப்பகுதிக்கு ஒதுக்கியுள்ளது. அவற்றை முழுமையாக பயன்படுத்துவதனூடாக இம்மாவட்டம் மேம்பாட்டின் உச்சத்தை எட்டும். எனவே இந்த அரசாங்கம் ஆட்சியில் இருக்கின்ற காலத்திற்குள்ளேயே அழிந்துபோன எம் தேசத்தை மீளக்கட்டியெழுப்புவோம். இதற்காக மக்கள் அனைவரும் தொடர்ந்தும் எம்மோடு இணைந்து நிற்பதனூடாக மீண்டும் வளமானதொரு தேசத்தை கட்டியெழுப்ப முடியும்.

1956ஆம் ஆண்டு தொடக்கம் காணி அனுமதிப்பத்திரமின்றி வாழ்கின்ற மக்களின் காணிகளுக்கு அனுமதிப் பத்திரத்தினை வழங்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்துடன், சமூகத்தில் வறுமையிலுள்ள கணவனை இழந்த பெண்களுக்கு மாதாந்தம் 1500 ரூபா நிவாரணம் வழங்கவுள்ளதாகவும் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்தார்.

தொடர்ந்து விளையாட்டு மைதானத்தின் பெயர்ப் பலகையினை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் திறந்து வைத்தார். இக்கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் ஈ.பி.டி.பி. வேட்பாளர்களான மனோகரன் அன்ரனி, கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் அபிவிருத்திச் சங்கத்தினர், பெருமளவான பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (29)

# உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்க உதவுமாறு பெற்றோர் கோரிக்கை

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி - வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் கடந்த 50 ஆண்டுகளாக இயங்கி வரும் நிலையில் உயர்தர வகுப்புக்கள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம், கிராமமக்கள் ஆகியோர் கவலை தெரிவிக்கின்றனர்.

1953 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை கல்வியிலும் விளையாட்டிலும் பல சாதனைகளை படைத்துள்ளது.

இந்நிலையில் 50 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட இப்பாடசாலையில் உயர்தர வகுப்புக்கள் இடம்பெறாது இருப்பது வேதனை அழிப்பதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இப்பாடசாலையில் உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்க உதவுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்ஆகியோருக்கு கிராம மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (121)

# ஸ்ரீதரின் இன்றைய பலன்

(13.07.2011 – புதன்கிழமை)

## பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம்

ஆனி 28 ஆம் நாள்.

இராகுகாலம் 11.59–1.29, சுபநேரம் 04.29 –05.59,

நட்சத்திரம் கேட்டை மு.ப. 10.04 வரை

திதி: திரயோதசி பி.ப. 2.14 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பண வரவு, குடும்பத்தில் நிம்மதி, இனசன அழைப்பு, தொழில் விருத்தி.

**ரிஷபம:–** பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், தொழில் விருத்தி, மனக்குறை.

**மிதுனம் :–** பணக் கஷ்டம், வசதிக்குறைவு, தொழில் முடக்கம், தெருவிபத்து.

**கடகம்:–** பண வரவு, இனசன அழைப்பு கல்விப்பாராட்டு, மனைமகிழ்ச்சி.

**சிம்மம்:–** சகோதரபாசம், பண வரவு, தொழில் விருத்தி, தேக ஆரோக்கியம்.

**கன்னி :–** பண வரவு, குடும்பத்தில் குதூகலம், மனமகிழ்ச்சி, விதண்டாவாதம்.

**துலாம் :–** பணக் கஷ்டம், நண்பர் வருகை, தொழில் இலாபம், தேக ஆரோக்கியம்.

**விருச்சிகம்:–**பண வரவு, தேக சுகக் குறைவு,மனச்சஞ்சலம், தொழில் வெற்றி.

**தனுசு:–** பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மன நிம்மதி, உடல் உபாதை.

**மகரம்:–** உறவினர் ஆதரவு, வசதிக் குறைவு, காரிய சித்தி, நண்பர் விமர்சனம்.

**கும்பம் :–** பணக் கஷ்டம், தேக சுகக்குறைவு, தொழில் இலாபம், பெரியோர் பாராட்டு.

**மீனம்:–** பண வரவு, மனமகிழ்ச்சி, குடும்பத்தில் நிம்மதி தானதர்ம சிந்தனை.

# "சோ ஆ" நிறுவனத்தின் வாழ்வாதார உதவிகள்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி - கல்மடுநகர் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு மேலும் 24 தற்காலிக வீடுகள் சோ ஆ நிறுவனத தினால் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி தற்போது இரட்டையணைக் குளம் பகுதியில் 13 வீடுகளும், பிள்ளையார் குளம் பகுதியில் 6 வீடுகளும், 10 ஏக்கர் பகுதியில் 6 வீடுகளும் என 25 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இப்பிரதேச மக்களுக்கு இந் நிறுவனத்தினால் வாழ்வாதார உதவித் திட்டங்களும் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் மக்களின் தேவைகளை இனங் கண்டு அவற்றுக்கு ஏற்ப தற்காலிக மல சலகூட வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டு வருகிறது. (110)

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களம் நெறிப்படுத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை தாளையடி தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் கொழும்பு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய வைத்தியசாலைகளின் வைத்திய நிபுணர்களும், வைத்திய அதிகாரிகளும் பங்குபற்றவுள்ளனர்.

இதில் பொது மருத்துவம், சத்திரசிகிச்சை, சிறுவர் மருத்துவம், கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, தோல் சிகிச்சை, பற்சிகிச்சை ஆகிய நிபுணத்துவசேவைகள் வழங்கப்படும்.

மேலும் இங்கு நடமாடும் ஆய்வுகூட மருத்துவ சோதனைகளும் ECG ஸ்கானிங் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. எனவே இப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் இந்த இலவச மருத்துவ முகாமில் பங்குபற்றி பயன் பெறலாம் என யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

# மீள்குடியேற்றப் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில் தெற்கு ஆகிய இரு கிராமங்களுக்கான மீள் குடியேற்றம் இவ்வாரம் இடம்பெறவுள்ளது.

இவ்விரு கிராம மக்கள் மீள் குடியேற்றத்திற்கு விருப்பம் தெரிவித்த போதிலும், முற்றாக இதுவரை பதிவுகளை மேற்கொள்ளவில்லை. நாகர் கோவில் மேற்கு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கிராம சேவகர் என். பர்லசுந்தரத்திடமும், நாகர்கோவில் தெற்கு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கிராமசேவகர் எஸ். வித்தியாபதியிடமும் பதிவுகளை மேற்கொண்டு மீள் குடியேற்றத்திற்கு உதவுமாறு உதவி அரசாங்க அதிபர் ந. திரு.லிங்கதாசன் கேட்டுள்ளார். (109)

# அக்கராயன் ஆரம்பப் பாடசாலைக்கு அதிபரின்றி கல்விச் செயற்பாடு பாதிப்பு


(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி - அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் கடந்த 6 மாதங்களாக அதிபர் இல்லாது இயங்கி வருவதால் பாடசாலைச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக கல்விச் சமூகத்தினரால் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கராயன் மகாவித்தியாலயம் இசுறுபாடசாலையாக தெரிவு செய்யப்பட்ட நிலையில் அக்கராயன் மகாவித்தியாலய ஆரம்பபிரிவு அக்கராயன் ஆரம்ப மகாவித்தியாலயம் என்ற பெயருடன் புதிய பாடசாலையாக கடந்த ஜனவரி மாதம் 19ஆம் திகதி முதல் ஆரம்பமாகி இயங்கி வரும் நிலையில், இதுவரை இப்பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படவில்லை.

இதேவேளை இப்பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படாமை தொடர்பாக பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு முறைபாடுகளை தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. 142 மாணவர்களுடன் இயங்கி வரும் இப்பாடசாலை நிரந்தரக் கட்டடம் இன்றி தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து பாடசாலைக்கு அதிபரை நியமிப்பதுடன், நிரந்தரமாக காணியை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (121)



யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற விஞ்ஞானக் கண்காட்சி நிகழ்வில் யாழ். கல்வி வலய மூத்த விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ச.அருந்தவரட்ணம், யாழ்.கல்வி வலய விஞ்ஞான பாடஆசிரிய ஆலோசகர் ரி. தயாபரன் உள்ளிட்ட விருந்தினர்கள் பார்வையிடுவதை காணலாம்.









வடமாகாண விளையாட்டுப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற மன்னார் மாவட்டத்திற்கான வெற்றிக் கேடயத்தினையும், மூன்றாமிடத்தைப் பெற்ற வவுனியா மாவட்டத்திற்கான வெற்றிக் கேடயத்தையும் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இளங்கோவன், இரு மாவட்டங்களின் அதிகாரிகளிடம் கையளிப்பதனைக் காணலாம். (12)

# கொட்டடி நமசிவாய வித்தியாலயம் வரலாற்றில் படைத்தது சாதனை


ஜெ. அபிமன்


சு. தமிழரசன்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் வரலாற்றில் அண்மையில் நிறைவடைந்த வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் ஜெ. அபிமன், சு. தமிழரசன் ஆகியோர் மூன்று பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இவ்வெற்றிகள் மூலம் பதக்கங்களைப் பெற்ற மாணவர்கள் இருவரும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

மேற்படி விளையாட்டுப் போட்டியில் 17 வயதின் கீழ் பிரிவில் இடம்பெற்ற 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் செல்வன் ஜெயேந்திரன் அபிமன் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளார். அத்துடன் 15 வயதின் கீழ் பிரிவில் நீளம் பாய்தல் போட்டியில் செல்வன் சுதாகரன் தமிழரசன் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். இவ்வெற்றிகள் கொட்டடி நமசிவாயப் பாடசாலை வரலாற்றில் சாதனை என்பது குறிப்பிடத்தக்கது.

# வைர விழா கிண்ணத்திற்கான போட்டி யாழ். இந்து 4 விக்கெட்டால் தோல்வி

(கொழும்பு)

கொழும்பு இந்துக் கல்லூரியின் வைரவிழா கிண்ணத்திற்காக நடைபெற்ற கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் யாழ் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் கொழும்பு இந்துக் கல்லூரி அணி 4 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

கொழும்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் கொழும்பு இந்துக்கல்லூரி அணித் தலைவர் பி. இந்திரஜித் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

யாழ் இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 47.5 ஓவர்களில் 255 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

அணித் தலைவர் சஜீபன் 84 ஓட்டங்களையும் கல்கோகன் 53 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஆர். திவாரகரன் 64 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி 47.5 ஓவர்களால் 6 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்துவெற்றி இலக்கை அடைந்தது. இதில் ஏ.யசோதரன் 89 ஆட்டமிழக்காமல் ஓட்டங்களைக் குவித்தார். ஐ.எம். முனீப் 48 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சாளர்களில் ஜெஸ்மினன் 46 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக கொழும்பு இந்துக் கல்லூரியின் ஏ.யசோதரன் தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ். யாழ். இந்துக் க்ல்லூரியின் சஜீபனும், சிறந்த பந்துவீச்சாளராக கொழும்பு - கொழும்பு இந்துக் கல்லூரியின் ஆர்.திவாகரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

# இன்றைய போட்டி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும், சென் ஜோன்ஸ் அணிக்கும் இடையிலான ஒரு நாள் போட்டி இன்று சென் ஜோன்ஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்படும் இப்போட்டியில் இரு பாடசாலை அணிகளின் 15 வயதுப் பிரிவினர் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோகனதாஸ் சம்பியன்

(மட்டுவில்)

தென்மராட்சியிலுள்ள 7ஆவது பிரிகேட் படைப் பிரிவின் ஏற்பாட்டில் தென்மராட்சியிலுள்ள கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணி சம்பியனானது.

இப்போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை கைதடி சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் மட்டுவில் கண்ணகை அணியும் நவசக்தி அணியும் மோதின., இதில் மட்டுவில் கண்ணகை அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது.

கைதடி வளர்மதி அணிக்கும் மட்டுவில் ஐங்கரன் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் ஐங்கரன் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றுக் கொண்டது.

அன்றைய தினம் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் 'பி' அணியும் மட்டுவில் ஐங்கரன் அணியும் மோதின. இதில் மட்டுவில் மோகனதாஸ் 'பி' அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் கண்ணகை அணியும் மட்டுவில் மோகனதாஸ் 'ஏ' அணியும் மோதின. இதில் மட்டுவில் மோகனதாஸ் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது.

மாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில் மோகனதாஸ் 'ஏ' அணியும் 'பி' அணியும் மோதிக் கொண்டன. இதில் மோகனதாஸ் 'ஏ' அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (118)


# செப்ரம்பரில் நடைபெறவுள்ள வன்னி விளையாட்டு விழா

(வவுனியா)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கிடையிலான விளையாட்டு விழா மிகக் கோலாகலமாக நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கனகராயன்குளம் பொதுமைதானத்தில் இடம்பெறவுள்ள இப்போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் இடம்பெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதில் மெய்வல்லுநர் போட்டிகளும், வன்னியின் பாரம்பரிய விளையாட்டுக்களும் இடம்பெறும் என்றும், வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு வெகுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இப்போட்டிகள் குறித்த முக்கிய கலந் துரையாடல் கடந்த ஞாயிற்றுக் கிழமை புலோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றள்ளது.



89ஆவது கூட்டுறவு தினவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற தென்மராட்சி பிரிவு வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் நடாத்தப்பட்டது. இதில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் வீரர் ஒருவருக்கு பதக்கம் சூட்டிக் கௌரவிப்பதனைக் காணலாம். (11)

# கிளி. ம.வி. தோல்வி

(கிளிநொச்சி)

சென் ஜோன்ஸ் கல்லூரி அணியின் வேகப்பந்துக்கு ஈடுகொடுக்க முடியாது தடுமாறிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி படுதோல்வியடைந்தது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியிலேயே கிளிநொச்சி ம.வி. தோல்வியடைந்தது.

இப்போட்டி கடந்த 10ஆம் திகதி கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய கிளிநொச்சி ம.வி. அணி, 15.5 ஓவர்களில் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரணவன் மட்டுமே ஆறு ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பிருந்தவன் மூன்று, சயன், சுபர்சன், காவஸ்கர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 4.3 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்துவெற்றியிலக்கை அடைந்தது. இதில் கிருத்திகன் எட்டு, கௌசிகன் ஐந்து ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர்.

## வீராங்கனை தோல்வி

(புதுடில்லி)

கடந்த வருடம் புதுடில்லி பொதுநலவாய விளையாட்டு விழாவில் தங்கப் பதக்கம் பெற்ற இந்திய ஓட்ட வீராங்கனை அஸ்வினி அக்குன்ஜி, தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து சோதனையில் தோல்வியடைந்துள்ளார்.

அவரின் சிறுநீர் மாதிரியின் இரண்டாவது பரிசோதனையிலும் ஊக்கமருந்து பாவனைக்கான தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக இந்திய மெய்வன்மைச் சங்கத்தின் பணிப்பாளர் மனோகர் லால் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இதனால் அவர் இரு வருட காலத் தடையை எதிர்நோக்குகிறார். இவர் பொதுநலவாய விளையாட்டு விழாவில் 400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் தங்கப்பதக்கம் வென்ற இந்திய அணியில் இடம்பெற்றார்.

பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்குபற்றிய இந்திய விளையாட்டு வீரர், வீராங்கனைகளில் அண்மைய நாட்களில் ஊக்கமருந்து சோதனையில் சித்திபெறத் தவறிய 8 ஆவது நபர் அஸ்வினி அக்குன்ஜி ஆவார்.

கடந்தவாரம் சைனி ஜோஸ், ஜவுனா முர்மு, டியன்னா தோமஸ் ஆகியோர் ஊக்க மருந்து சோதனைகளில் தோல்வியுற்றனர்.

24 வயதான அஸ்வினி, கடந்த வருடம் சீனாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவிலும் 400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் தங்கம் வென்ற இந்திய அணியில் இடம்பெற்றதுடன் 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்திலும் தங்கப்பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

## உலக டெஸ்ட் அணியை அறிவிக்கவுள்ளது ஐ.சி.சி.

(துபாய்)

சிறந்த கிரிக்கெட் வீரர்கள் அடங்கிய உலகின் தலைசிறந்த டெஸ்ட் அணி ஒன்றை சர்வதேச கிரிக்கெட் சபை அறிவிக்கவுள்ளது. கனவு அணி என்றும் கூறப்படும் இந்த அணியில் இடம் பெறும் வீரர்கள், ஆன்லைன் வாக்கெடுப்பு மூலம் தேர்வு செய்யப்படவுள்ளனர். அணியில் இடம் பெறும் வீரர்களைத் தேர்வு செய்ய மொத்தம் 60 பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஐ.சி.சி. இணையதளத்துக்குச் சென்று நமக்கு விருப்பமான வீரர்களுக்கு வாக்களிக்க முடியும். இரு நாள்கள் மட்டுமே இந்த வாக்கெடுப்பு நடத்தப்படும். 2 தொடக்க வீரர்கள், 3 நடு வரிசை ஆட்டக்காரர்கள், ஒரு விக்கெட் கீப்பர், 3 வேகபந்து வீச்சாளர்கள், ஒரு சுழற்பந்து வீச்சாளர் ஆகியோரை ரசிகர்கள் தேர்வு செய்ய முடியும். இதில் தொடக்க வீரர்கள் பிரிவில் சேவாக், நடுவரிசை பேட்ஸ்மேன்கள் பிரிவில் சச்சின், காவஸ்கர், சகலதுறை பிரிவில் கபில்தேவ், சுழற்பந்து வீச்சாளர்கள் பிரிவில் அனில் கும்ப்ளே, பிஷன்சிங் பேடி ஆகிய இந்திய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்தியா - இங்கிலாந்து இடையே லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் ஜுலை 21இல் தொடங்கும் டெஸ்ட் போட்டி, 2000ஆவது சர்வதேச டெஸ்ட் போட்டியாகும். இந்தப் போட்டி தொடங்குவதற்கு முன் இந்தக் கனவு அணியில் இடம்பெறும் வீரர்கள் அறிவிக்கப்படுவார்கள். இதில் இடம் பெறுவது சர்வதேச அளவில் கிரிக்கெட் வீரர்களுக்கு கிடைக்கும் பெரிய கௌரவமாகக் கருதப்படும். இந்த கௌரவத்தை வீரர்களுக்கு அளிக்கும் வாய்ப்பு கிரிக்கெட் ரசிகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## போட்டி சமநிலையானது ஆச்சரியத்தை அளித்தது

(டொமினிக்கா)

டோனி, ஹோலி போன்ற சிறந்த வீரர்கள் ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில் வெற்றி இலக்கை எட்ட முழுமையாக ஆடாமல் வலுவான இந்திய அணி சமநிலை முடிவை எடுத்தது எனக்கு ஆச்சரியம் அளித்தது என மேற்கிந்தியத்தீவு அணித் தலைவர் டரன் சமி தெரிவித்தார். பிசோவின் பந்து வீச்சை எதிர்கொள்ள நேர்ந்த சிரமத்தை இந்திய அணியினர் யோசித்து இருக்கலாம். எமது வீரர்கள் இப்போட்டியில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தினர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஓட்ட இலக்கை விரட்டியிருந்தால் தொடரை இழக்க நேரிட்டிருக்கும்

(டொமினிக்கா)

ஓட்ட இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லாதது ஏமாற்றம் அளிக்கவில்லை. வெற்றி இலக்குக்காக ஆடுகையில் தொடரை வெல்வதிலும் சிக்கல் ஏற்பட்டு விடலாம் என இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார். இந்த ஆடுகளத்தில் இதற்கு மேல் வெற்றி இலக்குக்காக ஆடுவது சரியாகாது என்று உணர்ந்ததால் சமநிலை நோக்கில் ஆடினோம். தொடரை வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த ஆட்டத்தில் நாங்கள் சிறப்பாக செயற்பட்டோம். மேற்கிந்தியத்தீவு அணியின் துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. கடைசி டெஸ்டில் வெற்றி பெறாதது எந்த வகையிலும் ஏமாற்றம் அளிக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.




சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 17 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் மெக்சிகோ அணி சம்பியனானது. மெக்சிகோவில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிப் போட்டியில் மெக்சிகோ அணியும், உருகுவே அணியும் மோதிக் கொண்டன. இதில் 2-0 என்ற கோல் கணக்கில் மெக்சிகோ அணி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

## அமுலாகிறது புதிய சட்டம்

(புதுடில்லி)

விளையாட்டுப் போட்டிகளில் ஊக்கமருந்து பயன்படுத்துவதை தடுக்கும் வகையில், வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கடுமையான புதிய சட்டம் கொண்டு வரப்பட உள்ளது.

சமீபத்தில் தடகள வீரர், வீராங்கனைகளிடம் நடத்தப்பட்ட ஊக்கமருந்து சோதனையில், மன்தீப் கவுர், சினி ஜோஸ், அஷ்வினி உள்ளிட்ட 8 பேர் பிடிபட்டனர். இது குறித்து மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் அஜய் மேகன் கூறியதாவது:

எங்களைப் பொறுத்தவரை தேசிய ஊக்கமருந்து தடுப்பு மையத்தின் (டபிள்யு. ஏ.டி.ஏ.,) விதிகளை, கிரிக்கெட் உட்பட மற்ற அனைத்து விளையாட்டு அமைப்புகளும் பின்பற்ற வேண்டும். இது பெரும்பாலும் சர்வதேச விளையாட்டு விதிகள் போன்று தான் இருக்கும். ஒருவேளை அதிலிருந்து மாறுபட்டு இருக்கும் பட்சத்தில், சர்வதேச விதிகளையே இங்கும் ஏற்றுக்கொள்வோம். தவிர, ஊக்கமருந்து பயன்படுத்துவதை தடுக்கும் வகையில், வரும் பார்லிமென்ட் கூட்டத்தில் புதிய சட்டம் கொண்டு வர முடிவு செய்துள்ளோம்.

## பொலிவிய அணியை வீழ்த்தியதன் மூலம் காலிறுதிக்கு முன்னேறியது கொலம்பியா

2011ஆம் ஆண்டு லத்தீன் அமெரிக்க கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் காலிறுதிக்குள் கொலம்பிய அணி முதன் முறையாக நுழைந்தது. பொலிவியா அணிக்கு எதி ராக 2- 0 என்ற கோல் கணக்கில் கொலம்பியா வெற்றி பெற்றது.

பிரிவு 'ஏ' யில் கோஸ்டாரீகா அணியை வீழ்த்தினால்தான் ஆர்ஜென்டீன அணி காலிறுதிக்குத் தகுதி பெற முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

பொலிவியா அணிக்கு எதிராக கொலம்பிய அணி முதல் 30 நிமிடங்களுக்குள்ளாகவே 2- 0 என்ற முன்னிலை பெற்றது.

அந்த அணியின் ரடாமெல் ∴பால்கோ இரண்டு கோல்களையும் அடித்தார். கோபா அமெரிக்காவின் மற்றொரு மிகப்பெரிய அணியான பிரேசில் அணி ஈக்வடார் அணிக்கு எதிராக வெற்றி பெற்றால் தான் காலிறுதிக்குள் நுழைய முடியும் என்ற நிலை உள்ளது.

கோஸ்டாரீகா அணி ஆர்ஜென்டீனா அணியைக் காட்டிலும் ஒரு புள்ளி கூடுதலாகப் பெற்று 3 புள்ளிகளுடன் 2ஆம் இடத்தில் உள்ளது. இந்த அணியை ஆர்ஜென்டீனா வீழ்த்த முடியா விட்டாலும் காலிறுதி வாய்ப்பு உள்ளது. ஏனெனில் சிறந்த 3ஆவது அணியும் காலிறுதிக்குத் தகுதி பெற முடியும். அந்த வகையில் பெரு, சிலி, வெனிசுலா ஆகிய அணிகளின் காலிறுதி நுழைவு உறுதியாகியுள்ளது.

## இங்கிலாந்திற்கு எதிரான தொடரை இழந்தது ஏமாற்றம் அளிக்கிறது

(லண்டன்)

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை இழந்தது ஏமாற்றம் அளிக்கிறது என இலங்கைத் தலைவர் டில்சான் தெரிவித்துள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்த எங்கள் இலங்கை அணிக்கு, ருவென்ரி-20 போட்டியில் கிடைத்த வெற்றி ஆறுதல் அளித்தது. இதேவேகத்துடன் ஒருநாள் போட்டியில் விளையாடியதால், ஒரு கட்டத்தில் 2-1 என முன்னிலை வகித்திருந்தோம். ஆனால் கடைசி இரண்டு போட்டியில் முழுத் திறமையை வெளிப்படுத்தத் தவறியதால், தொடரை இழக்க நேரிட்டது.

இத்தொடரில் எனது செயற்பாடு மிகவும் மோசமாக இருந்தது. ஒரு போட்டியில் கூட பெரிய அளவில் சாதிக்காதது ஏமாற்றம் அளிக்கிறது. கடந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளாக இலங்கை அணியின் நடுவரிசை துடுப்பாட்டம் பலவீனமாக உள்ளது என்ற கருத்து இருந்தது. ஆனால் இத்தொடரில் அது இளம் வீரர்கள் சிறப்பாக செயற்பட்டனர். முதல் நிலை துடுப்பாட்ட வீரர்கள் எதிர்பார்த்தபடி பெரிய அளவில் சோபிக்காதது பின்னடைவாக அமைந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

## ஆர்ஜென்டீன தலைநகரில் கார் விபத்து; காயங்களுடன் தப்பினார் மரடோனா

(பியூனஸ் அயர்ஸ்)

கால்பந்து ஜாம்பவான் டியகோ மாரடோனா ஆர்ஜென்டீனா தலைநகர் பியூனஸ் அயர்சில் நடந்த பயங்கர கார் விபத்தில் பலத்த காயத்துடன் உயிர் தப்பினார்.

காரில் அவருடன் பயணித்த காதலியும் காயமடைந்தார். இவர்கள் சென்ற கார் படு வேகமாக போய் ஒரு பேருந்து மீது மோதி விபத்துக்குள்ளாகியது. மாரடோனாவின் 81 வயதான தாயார் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரைப் பார்க்கச் சென்று கொண்டிருந்தபோது தான் மாரடோனா விபத்துக்குளாகி விட்டார்.

பியூனஸ் அயர்சில் உள்ள தனது வீட்டுக்கு அருகிலேயே விபத்துக்குள்ளானார் மாரடோனா. உடனடியாக மீட்கப்பட்ட அவரும், அவரது காதலியும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இருவரும் தற்போது அபாயக் கட்டத்தைத் தாண்டி விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இருவரும் கடும் காயமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. மாரடோனாவுக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டதாகவும், அவரது காதலிக்கு இடுப்பில் காயமேற்பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

## பொதுநலவாய போட்டிகளை நடத்த அனுதாப வாக்குகள் தேவையில்லை

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டின் பொதுநலவாய விளையாட்டு விழாவை நடத்தும் உரிமையைப் பெறுவதில் அனுதாப வாக்குகள் தேவையில்லை எனவும், தகுதி அடிப்படையில் அதற்கு போட்டியிட விரும்புவதாகவும் அம்பாந்தோட்டை 2018 பிரசாரக்குழு தெரிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டு விழாவை நடத்துவதற்கு இலங்கையின் அம்பாந்தோட்டை நகரமும் அவுஸ்ரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரமும் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. அபிவிருத்தியடைந்துவரும் பல நாடுகள் அரசியல் காரணங்களுக்காக இலங்கைக்கு வாக் களிக்கக்கூடும் என அவுஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

இது தொடர்பாக அம்பாந்தோட்டை பிரசாரக் குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியான நளின் ஆட்டிகல டெய்லி மிரருக்கு கருத்துத் தெரிவிக்கையில், எந்தவொரு அபிவிருத்தியடைந்துவரும் நாட்டையும் குறைத்து மதிப்பிடக்கூடாது. குறிப்பாக பொதுநலவாய போட்டிகளுக்கு தயார்படுத்தல் விடயத்தில் குறைத்துமதிப்பிடக்கூடாது. இலங்கை எந்தவொரு நாட்டினதும் அனுதாப வாக்குகளை தேடவில்லை. மாறாக, நாம் பெறும் வாக்குகள் தகுதி அடிப்படையிலானதாக இருக்கும் என்றார்.

அதேவேளை, இப்போட்டிகளை நடத்தும் உரிமை இலங்கைக்கு கிடைத்தால் 2016 ஆண்டிற்குள் இதற்கான நிர்மாணங்கள் பூர்த்தியடைந்திருக்கும் எனவும் அவர் கூறினார்.

17 விளையாட்டுக்களில் 15 விளையாட்டுக்களை ஒரே விளையாட்டு அரங்கத் தொகுதியில் கொண்டிருக்கும் அனுகூலத்தையும் நாம் பெற்றிருப்போம் என அவர் தெரிவித்தார்.

## இரண்டு பெல் உலங்கு வானூர்திகளை கொள்வனவு செய்கிறது விமானப்படை

(கொழும்பு)

விமானப்படைக்கு இரண்டு பெல்-412 உலங்கு வானூர்திகள் புதிதாகக் கொள்வனவு செய்யப்படவுள்ளன. பாதுகாப்பு அமைச்சு இதற்கென நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் 3.5 பில்லியன் ரூபா நிதியை குறைநிரப்பு பிரேரணை மூலம் கோரியுள்ளது.

விமானப்படையின் 4ஆவது உலங்கு வானூர்தி அணிக்காகவே புதிதாக இரண்டு உலங்குவானூர்திகளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெல்- 412 ஈபி உலங்கு வானூர்திகள் அமெரிக்காவில் தயாரிக்கப்படுபவை யாகும். இவற்றில் ஒன்று அல்லது இரண்டு விமானிகளும் 13 பேரும் இலகுவாகப் பயணம் மேற்கொள்ள முடியும்.

# வட, கிழக்கு மாகாணங்களை இணைப்பது தமிழீழத்தைக் கோருவதற்குச் சமமானதாகும்

## - என்கிறார் கிழக்கு மாகாண முதல்வர் சந்திரகாந்தன்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கக் கோருவது தமிழீழத்தைக் கோருவதற்கு சமமானது என்று கிழக்கு மாகாண முதல்வர் சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ்சேனையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் தவறான அரசியல் முன்னெடுப்புகளாலும், ஆயுதப் போராட்டத்தினாலும் அழிவுகளை சந்திதுள்ளனர்.

தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்று கூடி வட்டுக்கோட்டை தீர்மானம் பிரகடனம் என்று தமிழீழத்தை பிரகடனப்படுத்தியதால் தமிழ் இளைஞர்கள் உசுப்பேற்றி விடப்பட்டனர்.

இந்தத் தீர்மானத்தை கிழக்கு தமிழ்த் தலைவர்கள் பிரேரிக்கவோ, ஆமோதிக்கவோ இல்லை ஆனால் பின்னர், இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்தில் மட்டக்களப்பு தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சுமுகமான சூழலைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டும். அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டால் மட்டுமே அது சாத்தியம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் போது தமிழர் பெரும்பான்மை என்பது தனிப்பட்ட முறையில் எனக்கும் விருப்பமானதுதான். என்ற போதும், நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைளுக்குப் பின்னால் சென்று மீண்டும் அழிவுகளைச் சந்திக்க முடியாது.

வடக்கு, கிழக்கு சட்டரீதியாக இணைக்கப்பட வேண்டுமாயின் கிழக்கில் வாக்



கெடுப்பு நடத்தப்படும் முஸ்லிம்களும் சிங்களவர்களும் மாகாண இணைப்புக்கு எதிராக வாக்களித்தால், தமிழர்கள் தோல்வியுற்று தற்போது கிடைக்கும் சலுகைகளைக் கூட இழக்க வேண்டியேற்படும்.

எனவே, மாகாணசபைக்கு அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வது தான் இறுதியான தீர்வாக அமையும் என்றும் சந்திரகாந்தன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இறுதிக்கட்ட யுத்தத்தின்போது 40 ஆயிரம் மக்கள் உயிரிழக்கவில்லை

## - பாதுகாப்பமைச்சு மறுப்பு

(கொழும்பு)

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என பாதுகாப்பு அமைச்சு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

யுனிசெப் அமைப்பினால் அண்மையில் வெளியிடப்பட்ட புள்ளி விபரத் தரவுகளின் மூலம் இந்த விடயம் புலனாகியுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 2564 பேர் காணாமல் போயுள்ளதாக யுனிசெப் அமைப்பு அண்மையில் தகவல் வெளியிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இதன்படி, 40000 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் போது பூச்சிய பொதுமக்கள் இழப்பு என்ற கொள்கையை அரச படையினர் பின்பற்றியுள்ளமை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைக் கிளையின் முன்னாள் பேச்சாளர் கோர்டன் வைஸ், யுத்தத்தின் போது 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக முன்னர் அறிவித்திருந்தார்.

எனினும், அண்மையில் வெளியிட்ட புத்தகமொன்றில் இந்த எண்ணிக்கை 10,000மாக இருக்கலாம் என தெரிவித்துள்ளார்.

# போலிமுகவர்களை இனங்காணும் வகையில் நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வுச் செயற்பாடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் சட்டவிரோதமான முறையில் அதிகளவிலான பணத்தைப் பெற்றுக் கொண்டு வெளிநாடுகளில் வேலை பெற்றுத்தருவதாக கூறி பொதுமக்களை ஏமாற்றும் போலி முகவர்களையும் ஏனைய ஆசாமிகளையும் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்கும் வகையில் நாடுதழுவிய ரீதியில் பொது மக்களிடையே விழிப்புணர்வு நிகழ்சிகளை நடாத்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் திட்டமிட்டுள்ளது.

பிரதேசங்களிலுள்ள பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலகங்கள் மற்றும் மத்தியஸ்தர்கள் சபைகள் மூலம் மேற கொள்ள ,திட்டமிடப்பட்டுள்ள இந்த விழிப்புணர்வு செயலமர்வுகளினூடாக சட்டபூர்வமான முறையில் வெளி நாடுகளில் நிலவும் வெற்றிடங்களுக் கேற்ப தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுக்க வழியேற்படுத்துவதோடு, ஏமாற்று பேர் வழிகளிடமிருந்து அப்பாவி பொது மக்களையும் காப்பாற்ற முடியுமென வெளிநாட்டு வேவைவாய்ப்பு பணியக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு ஏற்கனவே கிடைத்துள்ள முறைப்பாடுகளைத் தொடர்ந்து சட்டவிரோதமான முறையில் பணம் பெற்று வெளிநாடுகளுக்கு வேலைக்காக அனுப்பாமல் ஏமாற்றி வருபவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை எதிர்காலத்தில் இவ்வாறு ஏமாற்றுபவர்கள் சம்பந்தமாக 0112864118 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு உடன் அறிவிக்குமாறும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது

# எதிர்கால இலக்குடன் வேலைசெய்யும் அரசாங்கமே நாட்டிற்கு அவசியமாகும்

## - ரவிகருணாநாயக்க எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டிற்கு எதிர்கால இலக்குடன் கூடிய அரசாங்கமொன்றே அவசியமானது என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அத்தனகல்ல- ஊருபொல நகரத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குடும்பமொன்றும் பிரதேசமொன்றும் மாத்திரம் அபிவிருத்தியடைவது ஒரு நாட்டின் அபிவிருத்தியாக அமையாது.

மக்களின் வாழ்க்கையில் காணப்பட்ட பிரச்சினைகள் குறைவடைந்து வளங்கள் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்ற தருணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் அவசியமாகின்றது.



நாட்டிற்கு உண்மையான நன்கு சிந்தித்து எதிர்கால இலக்குடன் வேலை செய்யும் அரங்கமொன்றே அவசியமெனவும் அதையே இன்று மக்கள் விரும்புகின்றனர் எனவும் அவர் மேலும் கூறினார்

## யாழில் அசாதாரண சூழல் இல்லை என்கிறார் சுசில்



(கொழும்பு)


தமிழ் அரசியல் கட்சிகள் உட்பட சில குழுக்கள் யாழ்ப்பாணத்தில் அசாதாரண சூழல் நிலவுவதாக தெரிவிக்கின்ற போதிலும், யாழில் சாதாரணமான ஒருசூழல் காணப்படுவதாக அரசு தெரிவித்துள்ளது.

அண்மையில்தான் யாழ்ப்பாணத்துக்கு சென்று பார்த்த போது அங்கு சாதாரணமானதும் அமைதியானதுமான சூழல் காணப்பட்டதாக கனியவளத் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தோல்வியை எதிர்கொள்ளும் நிலைப்பாட்டில் உள்ள ஒருசில கட்சியினரே இவ்வாறு சுதந்திரம் இல்லை என தெரிவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# கனடா வாழ் தமிழ் இளைஞனின் கொலை; தகவல் தருபவருக்கு சன்மானம் அளிப்பு

## - ரொரன்டோ பொலிஸார் அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த கனடா வாழ் பிரஜையான தமிழ் இளைஞன் ஒருவன் இரண்டு வருடங்களுக்கு முன்னர் தாக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தகவல் வழங்குபவர்களுக்கு வெகுமதி வழங்கவுள்ளதாக ரொரன்டோ பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கிறிஸ்டியான் தனபாலன் என்ற 22 வயதுடைய இளைஞனே கடந்த 2009 ஆம் ஆண்டு தாக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு காலையில் கிறிஸ்டியான் தனபாலன் என்ற இளைஞனும் மற்றும் அவனது நண்பர்கள் ஐவரும் கென்னடி வீதி மற்றும் புறநகர் ஸ்கார்புரோ பிரதேசத்தின் நெடுஞ்சாலையில் வைத்து ஒரு குழுவினரால் தாக்கப்பட்டனர்.

கடுமையான தாக்குதலுக்கு உள்ளான கிறிஸ்டியான் தனபாலன் சன்னிபுருக் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு சில நிமிடங்களிலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் தெரிவிக்கையில்,

தனபாலனும் அவனது நண்பர்களும் சுமார் 12.15 மணியளவில் கைப்பந்து விளையாடி விட்டுவெளியேறுகையில் 15 -20 பேர் கொண்ட ஆண்கள் மட்டையால் பலமாக தாக்கியுள்ளனர்.

தனபாலனின் நண்பர்களுக்கு சிறிய காயங்களே ஏற்பட்டதாக்கவும், தனபாலனே மிக மோசமான தாக்குதலுக்கு உளளானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தனபாலனின் தலையில் பலமான அடிகாயம் ஏற்பட்டிருந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். தாக்குதலுக்கான காரணம் மர்மமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தனபாலனும் அவனது நண்பர்களும் கைப்பந்து விளையாடிக் கொண்டிருக்கும் போது அதேநேரம் அருில் இன்னொரு குழுவினர் கிரிக்கட் விளையாடியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இரு குழுக்களுக்கிடையே ஒரு வாய் மொழிப் பாரிமாற்றம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கவில்லை.

கனடா தமிழ் சமூகத்தில் உள்ள இந்த இரு குழுக்களுக்கும் இடையில் இருந்த இன மோதலே இந்த வன்முறைக்கு காரணமாகலாம் என்த் தெரிவிக்கப்படுகிறது.

26 முதல் 30 வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியாயின் 'R' எனவும் பிழையாயின் 'S' எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

26. தேசப் படங்களில் நதிகளைக் காட்டுவதற்கு நீல நிறத்தைப் பயன்படுத்துவர். ( )

27) தவளையை அம்பிபியா அல்லது ஈருடக வாழி என அழைப்பர் ( )


28) 'பட்டடை' என்னும் உபகரணம் கம்மாலையில் பயன்படுத்தப்படும் ( )

29) குண்டுமணி விதை கறுப்பு நிறமானது. ( )

30) துத்திரி என்னும் விதை விலங்குகளில் ஒட்டிப் பரவுகின்றது. ( )

கீழே காட்டப்பட்டுள்ள உருக்களின் பெயர்களைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

31. 32. 33.



34. .................... 35. .................... 36. ....................

37) 1) ஒரு நேர்கோடு வரைய குறைந்தது எத்தனை புள்ளிகள் தேவை : ....................
2) பல சமச்சீர் அச்சுக்களையுடைய கணித உரு ஒன்றின் பெயர் தருக.: ....................
3) 12 விளிம்பு 6 முகம் 8 உச்சி

மேற்படி இயல்புடன் பொருந்தும் திண்ம உரு ஒன்றின் பெயர் தருக: ....................

38)

| |
|---|
| 7 |
| 3 2 |

அருகே கூட்டுக்குள் தரப்பட்டுள்ள எண்களைப் பயன்படுத்தி விடை எழுதுக.
1) இந்த எண்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண் எது?
2) இந்த எண்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண் எது?

39) கல்விச் சுற்றுலா ஒன்றிற்கு சென்ற மாணவர் பற்றிய விபரம் வருமாறு.


| தரம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| 4 | 55 | 52 |
| 5 | 15 | 30 |

1) சுற்றுலாவில் பங்கு பற்றிய தரம் 4 மாணவர்களின் முழு எண்ணிக்கை எத்தனை?
....................

2) சுற்றுலாவிற்கான ஒரு பிள்ளையிடம் இருந்து பெறப்பட்ட பணம் ரூபா 50.00 எனின் தரம் 5 ஆண்பிள்ளைகளிடம் இருந்து பெறப்பட்ட பணம் எவ்வளவு ரூபாய்?
....................


3) இந்தச் சுற்றுலாவில் கலந்து கொண்ட பிள்ளைகளின் முழு எண்ணிக்கையும் எத்தனை?
....................

40.



அருகே உள்ள உருவில் உள்ள வட்டம் ஒன்றின் விட்டம் 10 cm எனின், படத்தில் உள்ள சதுரத்தின் சுற்றளவு எவ்வளவு?



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011
பகுதி - II
வினாக்கள்

கல்வி முரசு
வெளியீடு 22

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

ஆரூரன் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு தமிழ்க் குடிமகன். ஆரூரனின் தந்தை கந்தசாமி ஓர் ஆசிரியர். அவர் தினமும் பிள்ளையார் ஆலயம் சென்று வழிபடுவார். 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான்காம் திகதி பிறந்த ஆரூரன் தற்போது தரம் 5 வகுப்பில் கல்வி கற்கிறார். ஆரூரனுக்கு ஆரபி, சாமந்தி, வாண்மிலன் என்னும் சகோதரர்கள் உண்டு. ஆரூரனின் வீடு யாழ். பிரதம தபாற்கந்தோருக்கும் யாழ். புகையிரத நிலையத்திற்கும் அண்மையில் உள்ள புனித சவேரியார் வீதியில் இல. 10 இல் அமைந்துள்ளது.

மேற்படி பந்தியை ஆதாரமாகக் கொண்டு ஆரூரனால் நிரப்பப்பட்டது போன்று பின்வரும் சுய விபர விண்ணப்பப்படிவத்தை நிரப்புக.

1) முழுப்பெயர் :- ....................
2) தந்தையின் பெயர் :....................
3) நிரந்தர முகவரி : ....................
4) இனம் : ....................
5) பால் : ....................
6) சமயம் : ....................
7) பிறந்த திகதி:- வருடம் .................... மாதம் .................... திகதி
8) தந்தையின் தொழில் : ....................
9) சகோதரர்களின் எண்ணிக்கை : ....................
10) கிட்டிய தபாற்கந்தோர் :....................
11) கிட்டிய புகையிரத நிலையம் ....................

மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்

12) ........ ....................
கையொப்பம்

02) கூட்டுக்குள் தரப்பட்டுள்ள சொற்களை மட்டும் பயன்படுத்தி கருத்து நிறைந்த இரண்டு வாக்கியங்களை எழுதுக.

பாடம், மாணவர், சித்திரங்கள், வரைந்த, பாடசாலை, கற்பித்தார், ஆசிரியர், அழகானவை, வகுப்பறை.
1) ....................
2) ....................

03) கீழ் உள்ள தொடர்களில் 'பயனற்ற வேலை' என்னும் பொருள்பட அமைந்த தொடரைத் தெரிவு செய்க.
1) கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல
2) சுழற் காற்றில் அகப்பட்ட துரும்பு போல
3) செவிடன் காதில் சங்கு ஊதியது போல

04) பின்வரும் விளக்கத்தினால் குறிப்பிடப்படும் சொல்லை எழுதுக.

1) இறந்தவர்களுக்காக வருடம் தோறும் கொடுக்கப்படும் தானம் ..............................

2) ஈர்க்கினால் செய்யப்பட்ட துப்புரவு செய்யப் பயன்படுத்தும் ஒரு உபகரணம் ..............................

05) காலைக் கூட்டமொன்றில் அதிபர் ஆற்றிய நற்சிந்தனையில் இருந்து ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அதிலுள்ள இடைவெளிகளை கூட்டுக்குள் தரப்பட்ட சொற்களைக் கொண்டு நிரப்புக.

நடையுடை, காலையும் மாலையும், சீருஞ்சிறப்பும், ஊனும் உறக்கமும்

ஷஅன்பு மாணவர்களே, நீங்கள் 1) .............................. இறைவனை வணங்க வேண்டும். 2) .............................. குறைத்துக் கல்வியைக் கற்பதில் அக்கறை செலுத்த வேண்டும். உங்கள் 3) .............................. மற்றவர்கள் பின்பற்றத்தக்கதாய் அமைதல் வேண்டும். அப்போதுதான் நீங்கள் எதிர்காலத்தில் 4) .............................. பெறுவீர்கள்.

06) ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி) எழுதுக.

1) நுளமபு : ..............................

2) மதிய உணவு ..............................

3) வெள்ளிககிழமை : ..............................

07) பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) Happy Birthday ..............................

2) Please sit down : ..............................

3) I want to play :..............................

08) பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் கருத்தைத் தமிழில் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1) பத கனன : ..............................

2) மெஹ்றி எனன? ..............................

3) காயாலய : ..............................

09) பின்வரும் சொற்களின் கருத்தைத் தரும் ஆங்கிலச் சொல்லை தமிழில் எழுதுக.

1) One : ..............................



2) Principal : ..............................

**வினா இல 10 முதல் 25 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

10. பின்வரும் மலர் வகைகளில் காலையில் மலர்ந்து சூரியன் மறையும் வரை சூரியனை நோக்கியபடி இருக்கும் மலர் வகை யாது?

1) சூரியகாந்தி 2) அலரி 3) நாலுமணி 4) நித்திய கல்யாணி

11) பின்வரும் விளையாட்டுக்களில் இலங்கையின் தேசிய விளையாட்டுடன் தொடர்புடைய உரு.

1)  2)  3)  4) 



12) வயிற்றோட்ட நோய்க்கு ஆளாகி அடிக்கடி வயிற்றுப் போக்குடைய நோயாளிக்கு நீர் கூறும் அறிவுரை.

1) நல்ல போசாக்கான உணவு வகைகளை உண்ணுதல் வேண்டும்.
2) நீராகாரம், ஜீவனி முதலியவற்றை அருந்துவதோடு வைத்திய ஆலோசனையையும் பெறுதல்.
3) எதுவித முயற்சியும் இன்றி ஓய்வில் இருத்தல்.
4) வயிற்றோட்டம் நின்றதும் வைத்தியரிடம் சென்று காட்டுதல்.

13) வாயில் இட்டு வெற்றிலையை மெல்லும்போது சிவப்பு நிறம் ஏற்படக் காரணமான பொருள்.

1) வெற்றிலை 2) பாக்கு 3) சுண்ணாம்பு 4) பாக்கும் சுண்ணாம்பும்.

14) பொரித்த குஞ்சுகளை கோழி எங்கு வைத்துப் பாதுகாக்கும்?

1) கோழிக் குஞ்சுகளை மறைத்த வண்ணம் அவற்றின் மேல் உட்கார்ந்து இருந்து பாதுகாக்கும்.
2) இறக்கையுள் வைத்து அணைத்துப் பாதுகாக்கும்.
3) பாதுகாப்பாக பற்றையுள் ஒளியவிட்டு வெளியே இருந்து காவல்காக்கும்.
4) கோழிக் குஞ்சுகளை நெருக்கமாக உட்காரவைத்து தானும் கூட இருந்து பாதுகாக்கும்.

15) பின்வரும் பூச்சி இனங்களுள் சுய ஒளி உடைய பூச்சி எது?

1) பட்டாம் பூச்சி 2) மின்மினிப்பூச்சி 3) சில்வண்டு 4) பச்சைப் பூச்சி.

16)

| | மாத்தளை | காலி | கொழும்பு |
|---|---|---|---|
| காலி | | | 116 |
| மாத்தளை | | 45 | 161 |
| அம்பாந்தோட்டை | 77 | 122 | 283 |

இலங்கையில் உள்ள சில நகரங்களிடையேயுள்ள தூரங்கள் கீழேயுள்ள கோட்டுப்படத்தில் காணப்படுகின்றன. இதனைப் பயன்படுத்தி அம்பாந்தோட்டையில் இருந்து கொழும்பு வரையான தூரம் எத்தனை கிலோ மீற்றர்?


1) 116 2) 77 3)283 4)161

17) ஒரு உணவுப் பொருள் பொதியை வாங்கும் போது அவதானிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சம எது?

1) உற்பத்தித்திகதி 2) பொதி செய்த திகதி
3) பொதியின் பௌதிக நிலை 4) காலாவதி திகதி

18) கீழ் வருவனவற்றுள் அத்தியாவசிய சேவைகளுள் ஒன்றாக கருதப்படுவது.

1) நீர் விநியோகம் 2) தொலைத் தொடர்பு 3) வைத்திய சேவை 4) மேற்கூறிய யாவும்.

19) 

அருகே காணப்படும் வீதிச்சைகையின் மூலம் காட்டப்படுவது என்ன?

1) முந்திச் செல்லத் தடை 2) வாகனங்கள் நிறுத்தக்கூடாது
3) வலப்பக்கம் திரும்பத்தடை 4) வாகனங்கள் நிறுத்தவும் தரிக்கவும் கூடாது.

20) வலையில் அகப்படும் மீன்களின் மூலையின் பெயர் பின்வருவனவற்றுள் எது?

1) கூடு 2) மடி 3) களங்கட்டி 4) கரைவலை

21) பின்வரும் இசைக்கருவிகளில் வளிநிரல் அதிர்வதன் மூலம் இசை எழுப்பும் கருவி ஏது?

1) யாழ். 2) தம்பரா 3) நாதஸ்வரம் 4) மத்தளம்

22) கோடுகளால் மட்டும் வரையப்படும் சித்திரத்தை வேறு எப்பெயர் கொண்டு அழைப்பர்?

1) கொலாச்வேக் 2) ரேகைச் சித்திரம் 3) பற்றிக் வேக் 4) அச்சுப் பதித்தல்

23) கீழ் வருவனவற்றுள் கிராமிய நடனம் எது?

1) கும்மி 2) தெம்மாங்கு 3) கரகாட்டம் 4) மேற்சொன்ன மூன்றும்.

24) மாதிரிக் கோடுகளைத் துணியில் பதிப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருள்.

1) அளவு நாடா 2) சுவடுவரை சில்லு 3) தீதாள் 4) ஊசி

25) இலங்கையின் தேசிய விளையாட்டில் பங்கு பற்றும் வீரர்களின் எண்ணிக்கை எத்தனை?

1) 6 பேர் 2) 7 பேர் 3) 11 பேர் 4) 22 பேர்

# நாகபாம்பு கடி திருவிழா



ஜார்க்கண்ட் என்ற மாநிலத்தில் ஒவ்வொரு ஆண்டும் மனச தேவி அம் மனுக்கு மரியாதை செலுத்தும் விதமாக நடைபெறும் வினோத திருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களை நாக பாம்பைக் கடிக்க வைத்து நேர்த்திக் கடன் செலுத்துகிறார்கள்.

3 நாட்கள் நடக்கும் இந்த திருவிழா எப்படி வந்தது என்பது புரியாத புதிராகத்தான் உள்ளது. வேண்டுதலை நிறைவேற்றும் பக்தர்கள் மூன்று நாட்கள் பேச மாட்டர்கள் என்று கூறுகின்றனர். நாகபாம்பின் விஷம் உடலில் ஏறால் இருக்க "Eklavi" என்ற மூலிகையை பயன்படுத்துகிறார்கள்.

# 1400 ஆண்டுகள் பழமையான மரம்

சார்ல்ஸ்டன் என்றழைக்கப்பட்ட நகரம் தற்போது ஏஞ்சல் ஓக் எனப்படு கிறது. இந்த மரம் John's தீவில் உள்ள Ashley நதியிலிருந்து 12 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது.



1400 ஆண்டு பழமை வாய்ந்த இந்த மரம் அந்த நகரத்தின் பொதுப் பூங்காவின் மையப்புள்ளியாக உள்ளது. ஏஞ்சல் மரம் தற்போது 65 அடி உயரமும் 160 அடி சுற்றளவு விட்டத்திலும் பரவியுள் ளது.

# மருத்துவத்துக்குப் பயன்படும் புழுக்கள்



மல்பெரி மரத்தில் இலைகளை உண்டு வளரும் பட்டு புழுக்கள் மிக வேகமாக வளருகிறது என்று கூறுகின்றனர். புரதச்சத்து அதிகம் உள்ள இந்த இலையை உண்டு வளரும் புழுக்கள் விரைவாக கூடு கட்டுகிறது.


இந்தக் கூட்டிலிருந்து 300 மீற்றர் முதல் 900 மீற்றர் நீளமுள்ள பட்டுநூல் கிடைக்கிறது. கூட்டை கலைத்தபின் இறந்துபோன பட்டுப்புழுக்களிலிருந்து பியூவீரியா பாசியனா எனப்படும் பூஞ்சை வளரு கிறது. இந்தப் பூஞ்சை சீன பாரம்பரிய மருத்து வத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

# கூரிய வாள்கள் வாயினுள்...



நாம் வாய்க்குள் சிறிய மீன்முள்ளுக் குத்தினாலே ஆ... என்று கத்தி ஊரைக் கூட்டி விடுவோம். ஆனால் இங்கே இந்த மனிதர் கூரிய நீண்ட வாள் களை தனது வாய்க்குள் நுழைத்து சாதனை புரிந்துள்ளார். இந்தியாவைச் சேர்ந்த ரமேஸ்ரீ சந்திர கசீர என்பதே இவரது பெயர். சுமார் 6 நீளமான வாள்களை ஒன்றன் மேல் ஒன்றாக தனது வாயினுள் நுழைத்து அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்துள்ளார் இந்த மனிதர்.

# மண்டையோட்டில் கத்தி



தனது தலையில் 4 அங்குல நீளமான கத்தி முனையொன்று இருப்பதை 4 ஆண்டுகளாக நபரொருவர் அறியாது வாழ்ந்த விசித்திர சம்பவம் சீனாவில் இடம்பெற்றுள்ளது.


யுனான் மாகாணத்தைச் சேர்ந்த லிபு என்ற மேற்படி நபர் (37 வயது), கடும் தலைவலிக்காக மருத்துவரிடம் சிகிச்சை பெற வந்தபோதே உண்மை வெளிச்சமாகியுள்ளது.

2006 ஆம் ஆண்டு கொள்ளைச் சம்பவமொன்றின் போது லிபு கத்திக்குத்துக் காயத்துக்கு ஆளாகினார்.

அச்சமயம் அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் கத்தி முனையின் ஒரு பகுதி அவரது மண்டையோட்டை ஊடுருவிய நிலையில் இருந்தமையை கவனிக்கத் தவறியிருந்தனர்.

இந்நிலையில் லிபு கடந்த மாதம் தனக்கு கடும் தலைவலி ஏற்பட்டுள்ளதாக கூறி மருத்துவர்க ளிடம் சிகிச்சை பெறவந்தார். மருத்துவர்கள் பல்வேறு சிகிச்சைகளை மேற்கொண்டும் லிபுவின் தலைவலி குணமாகாததால் அவரது தலையை 'எக்ஸ்ரே" படம் எடுக்க முடிவு செய்யப்பட்டது.

'எக்ஸ்ரே" படத்தில் லிபுவின் மண்டை யோட்டை கூரிய கத்தி முனையொன்று ஊடுருவி இருப்பதைக் கண்டு மருத்துவர்கள் அதிர்ச்சியடைந்த னர்.இதனையடுத்து யுக்ஸி நகரிலுள்ள பொது மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சை மூலம் லிபுவின் தலையை ஊடுரு விய கத்திமுனை அகற்றப்பட்டது.4 வருடங்களாக மண்டை யோட்டை கத்திமுனை ஊடுரு விய நிலையில் லிபு உயிர் பிழைத்திருந்தமை அபூர்வ நிகழ்வாக உள்ளதாக அவருக்கு சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர் லியோ ஸிவேயி கூறினார்.



# மால்வேர் வைரஸ்களை தடுப்பதற்கு

கணினியைப்பாதிக்கும் பல வைரஸ்கள் புதிது புதிதாக வந்து கொண்டே உள்ளன. நமது கணினியைப்பாதுகாப்பாக, வைரஸ்களிடமிருந்து வைத்துக் கொள்ள ஆண்டிவைரஸ் மென்பொருள்கள் தேவைப்படுகின்றன. சிலர் ஆண்டிவைரஸ் மென்பொருள்களை கட்டணம் செலுத்தியும் சிலர் இலவசமாகவும் பயன்படுத்தி வருகின்றனர். கணினியில் நல்ல ஆண்டிவைரஸ் போட்டிருப்பினும் சில நேரங்களில் மால்வேர்கள் போன்ற வகையிலான வைரஸ்களை கோட்டை விட்டு விடுகின்றன. இதனால் மால்வேர் மற்றும் ஸ்பைவேர் போன்ற நச்சுநிரல்களுக்கு எதிராகத்திறமையாக செயற்படுகிற கூடுதலான மென்பொருள்களைப் பயன்படுத்துவது கணினிக்குப்பாதுகாப்பாக இருக்கும். விண்டோஸ் இயங்குதள நிறுவனமான மைக்ரோசொப்ட் தற்போது மால்வேர் தொல்லைகளைத்தடுக்க புதிய மென் பொருளை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் பெயர் System Sweeper. இதன் மூலம் மால்வேர் பாதிக்கப்பட் டுள்ள கணினியில் இணைய இணைப்பில்லாத நேரத்திலும் சோதனை செய்து மால்வேர்களை அழிக்க லாம். இதனை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு மைக்ரோசொப்ட் வெளியிட்டுள்ளது. இதன் மூலம் உங்கள் கணினியில் ஆண்டிவைரஸ் மென்பொருள் போட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த மென்பொருளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இதனைத் தரவிறக்கி கணினியில் நிறுவிப் பயன்படுத்துமாறு வழிசெய்யவில்லை. சீடி/டிவிடி அல்லது பென் டிரைவில் மட்டுமே வைத்து பயன் படுத்த முடியும். தரவிறக்கம் செய்யும் போது சீடியிலோ அல்லது பென் டிரைவிலோ என்று தேர்வு செய்தால் அதில் தரவிறக்கம் செய்யப்படும். பின்னர் அந்த சீடியை கணினியில் போட்டு கணினியைச் சோதிக்க லாம். பின்னாளில் கணினி வைரஸ் பிரச்சினை காரணமாக பூட் ஆகவில்லை என்றால் நீங்கள் இந்த மென்பொருளைப் பதிந்துள்ள சீடியைப் போட்டு பூட் செய்து கொள்ள முடியும். உடனே கணினியில் என்னென்ன மால்வேர் வைரஸ் உள்ளனவோ அவற் றைக்கண்டறிந்து அழித்து விடும்.

இந்த மென்பொருள் ஒரு ஆண்டிவைரஸ் மென்பொரு ளுக்கு நிகரானது அல்ல. கணினியின் பாதுகாப்புக்கு கூடுதலாக வைத்துக்கொள்ளலாம். எதாவது வைரஸ் பிரச்சினை காரணமாக கணினி இயங்கவில்லை என்றால் அப்போது பயன்படுத்திக் கொள்ளலாம்.


தரவிறக்க சுட்டி:- htt ps://connect. micro soft.com/systemswee per

### கணினி மூலை

# சங்கரராமன் கொலை வழக்கு விசாரணைகள் முடிவடைந்தன

## ஜெயேந்திரர் உட்பட 24 பேர் நீதிமன்றில் 18 இல் ஆஜர்

(பாண்டிச்சேரி)



முதல்வர் ஜெயலலிதா கடந்த தடவை ஆட்சியில் இருந்தபோது பரபரப்பாக அடிப்பட்ட சங்கரராமன் கொலை விவகாரம், மீண்டும் ஒரு ரவுண்ட ரவுள்ளது. காரணம், இந்த வழக்குக்கான விசாரணை நேற்றுமுன்தினம் முடிவடைந்துள்ளது. சங்கரராமன் கொலை வழக்கில், காஞ்சிமடம் ஜெயேந்திரர், விஜயேந்திரர ஆகிய இருவரும் குற்றம்சாட்டப்பட்டிருந்தனர்.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கின் விசாரணை, புதுவை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி ராமசாமி முன்னிலையில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் ஜெயேந்திரர், விஜயேந்திரர் உட்பட, மொத்தம் 24 பேர் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினத்துடன் சாட்சிகள் விசாரணை முடிவ்டைந்தது. இதையடுத்து இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட விஜயேந்திரர், ஜெயேந்திரர் உட்பட 24 பேரும், எதிர்வரும் 18ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்று நீதிபதி ராமசாமி உத்தவிட்டார்.

இந்த வழக்கில் அரசு சாட்சிகளாக 370 பேர் பட்டியலிடப்பட்டிருந்தனர். 370 பேரில், 189 சாட்சிகளிடமே விசாரணை நடத்தப்பட்டிருந்தது. அவர்களுடைய வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டது .

அரசு தரப்புச் சாட்சிகளில் 92 பேர் பல்டி அடித்து, பிறழ் சாட்சியம் அளித்தனர். ரவி சுப்பிரமணியம் அப்ரூவரானார்.

தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தாலும், பல்டியடித்த சாட்சிகள் மீள்-பல்டி அடிக்க முடியாது. காரணம், நீதிமன்ற நடைமுறையில், சாட்சிகள் மீதான விசாரணகள் முடிவடைந்துவிட்டதாக நீதிமன்றப் பதிவேட்டில் பதிவாகிவிட்டது.

மூன்று காரணங்களுக்காக, சங்கரராமன் கொலை விவகாரம் மீண்டும் லைம்-லைட்டில் வரவுள்ளது.

விசாரணைகள் முடிவடைந்துள்ளதால், தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். காஞ்சி மடம் விஜயேந்திரர், ஜெயேந்திரர் இருவரும் நீதிபதியின் உத்தரவுப்படி நீதிமன்றில் ஆஜராக வேண்டும்.

காஞ்சி மடத்தில் கை வைத்ததால் தான் 'தெய்வக் குற்றமாகி, ஜெயலலிதா முன்பு பதவியை இழந்தார் என்று சொன்னவர்களும் இருக்கிறார்கள்.

# இந்தியச் செய்திகள்

# மத்திய அமைச்சரவையை மாற்றியமைத்தார் பிரதமர்

(புதுடில்லி)

மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அமைச்சரவை நேற்று மாற்றியமைக்கப்பட்டது. இதன் மூலம் மொத்தம் ஏழு அமைச்சர்களை நீக்கியுள்ள பிரதமர், புது முகங்கள் 8 பேருக்கு வாய்ப்பளித்துள்ளார்.

எம்.எஸ்.கில், தயாநிதிமாறன், சாய் பிரதாப், அருண் யாதவ், கந்திலால் புரியா, பி.கே. ஹந்திக், முரளிதியோரா ஆகியோர் மத்திய அமைச்சரவையில் இருந்து நீக்கபட்டுள்ளனர்.

வி.கிஷோர் சந்திராதியோ, பென்னி பிரசாத்வர்மா, தினேஷ் திரிவேடி ஆகியோர் மத்திய அமைச்சரவையில் புதிதாக இடம் பெற்றுள்ளனர்.

சிறிகாந்த் ஜெனா, ஜெயந்தி நட ராஜன், பபன்சிங் கதோவர் மற்றும் குரு தாஸ்காமத் ஆகியோரும் மத்திய் அமைச் சரவையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நிதி, பாதுகாப்பு, உள்துறை மற்றும் வெளியுறவு ஆகியத் துறைகளில் எவ் வித மாற்றமும் செய்யப்படவில்லை.

திரினாமுல் காங்கிரஸைச் சேர்ந்த தினேஷ திரிவேதிக்கு ரயில்வே அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.



ஆ.ராசா மற்றும் தயாநிதிமாறன் ஆகியோர் விலகியதை அடுத்து, மத்திய அமைச்சரவையில் தி.மு.க.வின் இரண்டு கேபினட் இடங்கள் காலியாக இருந்தன. இதுதொடர்பாக, அண்மையில் தி.மு.க.தலைவர் கருணாநிதியுடன் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆலோசனை நடத்தினார். தி.மு.க. சார்பில் அமைச்சர்களை புதிதாக நியமிக்க அக்கட்சி தலைமை விரும்பவில்லை எனத் தெரிகிறது.

இதன் தொடர்ச்சியாக, இந்த மத்திய அமைச்சரவை மாற்றத்தில் தி.மு.க. இடம் பெறவில்லை

# சாய்பாபா அறக்கட்டளை நிர்வாகம் நிதி விவகார அறிக்கையைக் கையளித்தது

(புட்டபர்த்தி)

அறக்கட்டளை வரவு-செலவு உட்பட அனைத்து நிதி விவகாரங்கள் குறித்தும் ஆந்திர அரசிடம் முழுமையான அறிக்கை நேற்றுமுன்தினம் தாக்கல் செய் யப்பட்டுள்ளதாக சிறி சத்ய சாய்பாபா அறக கட்டளை தெரிவித்துள்ளது.

சாய்பாபா அறக்கட்டளைக்குச் சொந்தமான ரூ.30 இலட்சத்துக்கும் மேற்பட்ட பணம் காரில் கடத்தப்பட்டதாக அண்மையில் செய்தி வெளியாகியது. இதையடுத்து சாய்பாபா அறக்கட்டளை நிதி மோசடி செய்யப்படுவதாக பல்வேறு தரப்பினர் குற்றம்சாட்டினர். இதுதொடர்பாக சில அமைப்பினர் போராட்டமும் நடத்தினர். இதையடுத்து, அறக்கட்டளை வரவு செலவு கணக்கு விவரங்களைத் தாக்கல் செய்யும்படி சாய்பாபா அறக்கட்டளை நிர்வாகிகளுக்கு ஆந்திர அரசு கடந்த ஜூன் 27ஆம் திகதி நகல் அனுப்பியது.

இதைத்தொடர்ந்து அறக்கட்டளை சார்பில் ஆந்திர அரசிடம் முழுமையான அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக சாய் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

# தி.மு.க.மீது போடப்படும் வழக்குகளை எதிர்கொள்வோம் என்கிறார் ஸ்டாலின்

(கோவை)

தி.மு.க.வினர் மீது போடப்படும் வழக்குகளைக் கட்சி எதிர்கொள்ளும் என அக்கட்சியின் மாநில பொருளாளர் ஸ்டாலின கூறினார். அவர் மேலும் கூறுகையில்:

தமிழகம் முழுவதும் தி.மு.க.வினர் மீது ஏராளமான பொய் வழக்குகள் போடப்பட்டு வருகின்றன.

பெரும்பாலான வழக்குகளுக்கு ஆதாரங்கள் எதுவுமில்லை. இது முழுக்க முழுக்க பழிவாங்கும் நடவடிக்கை. இதை எதிர்கொள்ள தி.மு.க. தயாராகி வருகிறது. அ.தி.மு.க. அரசால் பாதிக்கப்படும் தி.மு.க.நிர்வாகிகளைக் காப்பதற்கு, கட்சியின் வழக்கறிஞர் அணி தேவையான முயற்சிகளை மேற்கொள்ளும்.

இத்தகைய பொய் வழக்குகள் தொடர்பாக, கட்சியின் மாநிலத் தலைமையிடமும், அந்தந்த மாவட்டத் தலைமையிடமும் தகவல் தெரிவிக்கலாம். அங்குள்ள வழக்கறிஞர்கள் தேவையான ஆலோசனைகளை வழங்குவர். இவ்வாறு தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின் மேலும் தெரிவித்தார்.



# கலைஞர் ரி.விக்கு பணம் வழங்கிய 19 நிறுவனங்கள்மீது விசாரணை

(புதுடில்லி)

கலைஞர் ரி.விக்கு பணம் அளித்தது தொடர்பாக கொல்கத்தாவைச் சேர்ந்த 19 போலி நிறுவனங்கள் குறித்து வருமான வரித்துறை விசாரித்து வருகிறது.

2ஜி அலைக்கற்றை வழக்குப் பூதாகரமாகத் தொடங்கியதும், சினியுக் நிறுவனத்திடம் வாங்கிய ரூ.200 கோடி கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு இந்த நிறுவனங்கள் கலைஞர் ரி.வி.யைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

இந்த 19 நிறுவனங்களும் ரூ.52.20 கோடியை சபையர் மீடியா என்கிற நிறுவனத்துக்கு அளித்ததாகவும், அதன் பிறகு சபையர் நிறுவனம் அஞ்சுகம் பிலிம்ஸ் நிறுவனத்துக்கு ரூ.83 கோடி வழங்கியதாகவும், பிறகு அந்த நிறுவனத்திடமிருந்து கலைஞர் ரி.விக்கு ரூ.69.61 கோடி மாற்றப்பட்டதாகவும் விசாரணையல் தெரியவந்திருப்பதாக வருமான வரித்துறையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தப் பணத்தைக் கொண்டுதான் கரீம் மொரானிக்குச் சொந்தமான சினியுக் நிறுவனத்திடம் வாங்கிய ரூ.200 கோடி கடனை ரூ.230.31 கோடியாக கலைஞர் ரி.வி நிர்வாகம் திருப்பிச் செலுத்தியதாகவும் கூறப்படுகிறது.

# அமைச்சர் கபில்சிபல் மீதான விசாரணையை ஸ்பெக்ட்ரம் முறைகேட்டுடன் ஒப்பிட முடியாது

## உச்ச நீதிமன்றம் தெரிவிப்பு

(புதுடில்லி)

ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு அபராதத் தொகையை குறைத்துவிட்டதாக மத்திய தொலைத்தொடர்பு அமைச்சர் கபில்சிபல்மீது தொடரப்பட்ட வழக்கை, 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு விசாரணையுடன் தொடர்புபடுத்த முடியாது என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.


மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் கபில் சிபலுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு மையம் சார்பில் வழக்கறிஞர் பிரஷாந்த் பூஷன் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

ரிலையன்ஸ் நிறுவனம் ஓர் ஒப்பந்தத்தை மீறியதற்காக, அதற்கு ரூ.650 கோடி அபராதம் விதிக்க வேண்டும் என்று தொலைத்தொடர்புத்துறை அதிகாரிகள் கூறிய நிலையில், அந்த அபராதத் தொகையை அமைச்சர் கபில் சிபல் ரூ.5 கோடியாக குறைத்துவிட்டதாக அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

மேலும், மத்திய அமைச்சர் கபில் சிபல் மீது சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்றும் அம்மனுவில் கோரப்பட்டிருந்தது.

இம்மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உச்ச நீதிமன்றம், மத்திய தொலைத்தொடர்பு அமைச்சர் கபில் சிபல் மீது தொடரப்பட்ட இந்த வழக்கை, 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு விசாரணையுடன் தொடர்புபடுத்த முடியாது என்று தெரிவித்தது.

# சிங்கப்பூரிலிருந்து - சென்னைக்கு இன்று திரும்புகிறார் ரஜினிகாந்த்



(சென்னை)

சிங்கப்பூரில், ஆறு வார சிகிச்சையை முடித்துக் கொண்டு, நடிகர் ரஜினிகாந்த் இன்று சென்னை திரும்புகிறார். கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி, ரணா படப் பிடிப்பில் கலந்து கொண்ட போது, நடிகர் ரஜினிகாந்துக்கு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

இசபெல்லா மற்றும் போரூர் ராமச்சந்திரா மருத்துவமனைகளில், இரண்டு முறை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இதையடுத்து, உயர் சிகிச்சைக்காக சிங்கப்பூர் மவுன்ட் எலிசபெத் மருத்துவமனைக்குச் சென்றார். சிங்கப்பூர் டாக்டர்கள் அவரை நன்கு பரிசோதித்து, தீவிர சிகிச்சை அளித்து வந்தனர்.

சிகிச்சைக்கு பின், உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து, அங்கேயே ஒரு மாதம் காலம் தங்கி ஓய்வு எடுத்தார். இந் நிலையில், ஆறுவார சிகிச்சையை முடித்து, நடிகர் ரஜினிகாந்த் இன்று சென்னை திரும்புகிறார்.

# ஆப்கானிலுள்ள பிரான்ஸ் படையினரில் 1000பேர் அடுத்தவருடம் அழைக்கப்படுவர்

உலகச் செய்திகள்

(பாரிஸ்)


ஆப்கானிஸ்தானில் உள்ள தங்கள் இராணுவத்தினரில் 1000 பேர், அடுத்த ஆண்டு இறுதிக்குள் திரும்ப அழைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி கூறியுள்ளார்.

ஆப்கான் வந்துள்ள சர்கோஸி, தலைநகர் காபூல் அருகேயுள்ள இராணுவத் தளம் ஒன்றில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது இவ்வாறு தெரிவித்தார்.

பிரான்ஸ் படையினரை காலவரையின்றி ஆப்கானில் வைத்திருக்க விரும்பவில்லை. ஆப்கானில் போரும் வன்முறையும் முடிவுக்கு வருவது அவசியம். என்றும் சர்கோஸி தெரிவித்தார். ஆப்கானிஸ்தானில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 4000 இராணுவ வீரர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# லிபியாவில் அமைதியை ஏற்படுத்த பிரான்ஸ் ஜனாதிபதியுடன் பேச்சு

## - கடாபியின் மகன் தெரிவிப்பு



(திரிபோலி)

பிரான்சு நாட்டுடன் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக லிபியா தலைவர் கடாபியின் மகன் சயீப் அல் இஸ்லாம் தெரிவித்துள்ளார். லிபியத் தலைவர் கடாபி பதவி விலக வேண்டும். அதுவரை பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்று அந்நாட்டு கிளர்ச்சியாளர்கள் கூறி வருகின்றனர். தொடர்ந்து நேட்டோ நாடுகளும், கடாபி பதவி விலக வேண்டும் என வற்புறுத்தி வருகின்றன. ஆனால், ஐரோப்பிய நாடுகளுக்கு பயங்கரவாதிகளை அனுப்புவேன் என்று கடாபி சவால் விடுத்து வருகிறார்.

இந்நிலையில், பிரான்சு நாட்டுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக, கடாபியின் மகன் சயீப் அல் இஸ்லாம் கூறியிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. இது குறித்து பத்திரிகைகளில் வெளியான செய்தியில், கிளர்ச்சியாளர்களுடன் நாங்கள் பேச்சு வார்த்தையில் ஈடுபடவில்லை. பிரான்சு நாட்டுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம்.

எங்களது பிரதிநிதி பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோ சியை சந்தித்து பேசினார். அப்போது, தேசிய ஆட்சி மாற்றக் கவுன்சிலை நாங்கள் தான் உரு வாக்கினோம். எங்களுடைய ஆதரவு இல்லாமல், பணம் மற்றும் ஆயுதங்கள் இல்லாமல் கிளர்ச்சியாளர்களால் நீடிக்க முடியாது. திரிபோலியுடன் ஒப்பந்தம் ஏற்படும் போது, போரை வாபஸ் பெறும்படி நாங்கள் கிளர்ச் சியாளர்களை கட்டாயப்படுத்துவோம் என்று பிரான்சு அதிபர் சர்கோசி கூறியதாக, கடாபியின் மகன் சயீப் அல் இஸ்லாம் தெரிவித்துள்ளார்.

லிபியாவில், கடாபி அரசுடன் கிளர்ச்சியாளர்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. கடாபி தோற்கும் வரை காத்திருக்க கூடாது. லிபியா தலைவரும் பதவியை விட்டு இறங்க வேண்டும். இருதரப்பிலும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று பிரான்ஸ் இராணுவ அமைச்சர் ஜெரார்டு 'லாங்கியூட் கூறிய சில மணி நேரங்களில் கடாபியின் மகன் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

இதற்கு எழுத்துபூர்வமாக அமெரிக்கா அளித்துள்ள பதிலில், "ஆட்சி மாற்றம் எப்படி ஏற்பட வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டியவர்கள் கிளர்ச்சியாளர்கள். கடாபி பதவியில் நீடிக்க கூடாது என்பதில், நாங்கள் உறுதியாக உள்ளோம்" என்று தெரிவித்துள்ளது.

# ஆப்கான் ஜனாதிபதி ஹர்சாயின் இளைய சகோதரர் சுட்டுக்கொலை



(காபூல்)

ஆப்கான் ஜனாதிபதி ஹமீத்கர்சாயின் இளைய சகோதரரான வலிஹர்சாய் நேற்றைய தினம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆப்கானின் தென்பகுதி நகரான கந்தகாரில் வைத்து இவரது மெய்ப்பாதுகாவலரினால் சுடப்பட்டு உயிரிழந்தார்.

நீண்ட காலமாக வலிஹர்சாயின் மெய்ப்பாதுகாவலராக இருந்த சர்தார் மொகமட் என்பவர் அவர் மீது இரண்டு முறை தலையில் சுட்டதுடன் தானும் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர். தமது கடந்த பத்து வருட போராட்டத்தில் வலிஹர்சாய் கொல்லப்பட்டமையானது மிகவும் முக்கியமானதென அவர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை தமது சகோதரர் கொல்லப்பட்டமையை ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

# சூடான் நாடுகளுக்கிடையே எல்லை நகர் குறித்து சர்ச்சை

(அய்பாய்)

சூடான் மற்றும் தெற்கு சூடான் நாடுகளுக்கு இடையில், சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கும் எண்ணெய் வளமிக்க அப்யாய் நகரத்தின் மீது, அத்துமீறி தெற்கு சூடான் அதிகாரம் காட்டக் கூடாது என சூடான் அதிபர் ஓமர் அல் பீர் எச்சரித்துள்ளார்.

சூடான் நாட்டில் இருந்து பிரிந்து, கடந்த 9ஆம் திகதி, உலகின் 193ஆவது நாடாக தெற்கு சூடான் உதயமானது. 20 ஆண்டுகளுக்கும் மேல் நடந்த போரில், தெற்கு சூடான் 15 இலட்சம் மக்களைப் பலி கொடுத்து, தனி நாடாக உதயமாகியுள்ளது. இருநாடுகளையும் பிரிக்கும் எல்லையில், தற்போது, சூடான் (வடக்கு சூடான்) நாட்டின் கட்டுப்பாட்டில் அப்யாய் நகரம் உள்ளது. இது எண்ணெய் வளமிக்க நகரம். இந்நகரத்தின் மீது தெற்கு சூடான் நிர்வாக அதிகாரம் செலுத்தக் கூடாது என சூடான் அதிபர் ஓமர் அல் பீர் எச்சரித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

சூடான் மற்றும் தெற்கு சூடான் நாடுகள் ஒன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். அது நடக்கவில்லை. எனவே, போரை முடிவுக்கு கொண்டு வந்து, தெற்கு சூடான் மக்களின் விருப்பப்படி, தனி நாடு அறிவிப்பை செயல்படுத்தினேன். அதற்காக சூடான் கட்டுப்பாட்டில் உள்ள அப்யாய் நகருக்கு, தெற்கு சூடான் சொந்தம் கொண்டாடக் கூடாது. அப்படி சொந்தம் கொண்டாடினால், இரு நாடுகளுக்கும் இடையில் புதிய விரோதம் உருவாகும்.

அப்யாய் எல்லைப் பகுதியில் ஐ.நா.வின் அமைதிப் படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் வாபஸ் பெறவேண்டும். இங்கு எத்தியோப்பியா அமைதிப் படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படலாம். இருநாடுகளும் இதை வரவேற்கிறோம். ஐ.நா. அமைதிப் படையினரால் செய்ய முடியாததை, எத்தியோப்பியா படையினரால் செய்ய முடியும் என்று நம்புகிறோம். இவ்வாறு அதிபர் கூறினார்.

# பதிவிருக்கப் பெட்டகம்

வேதா என்கிற எஸ்.வேதாச்சலம் தமிழ்த் திரை இசையமைப்பாளர்களுள் கொஞ்சம் வித்தியாசமானவர். தான் எங்கிருந்து பாடலை நகலெடுக்கிறேன் என்ற விடயத்தையெல்லாம் மறைக்க அவர் முயற்சி செய்ததே இல்லை. அந்தக் காலங்களில் (1950-60) ஹிந்திப் பாடல்களை நேரடியாகத் தமிழில் தந்தவர் வேதா. பொதுவில் இப்பொழுதைய தலைமுறைக்கு உலக இசையை நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஆனால் அந்தக் காலங்களில் எல்லாம் அப்படியில்லை. வேதா தென்னாபிரிக்காவில் பிறந்தவர் (படித்ததெல்லாம் சென்னையில்தான்). அதனால் அவருக்கு லோக சங்கீதம் நன்றாகத் தெரிந்திருந்தது. வஞ்சனையில்லாமல், மாற்றி மறைக்க வேண்டும் என்று அதிகச் சிரமப்படாமல் இந்தியோ, ஜாஸோ பாடல்களை நேரடியாக அப்படியே தமிழ்த் திரைப்படங்களுக்குப் பெயர்த்துக் கொடுப்பார். சுருட்டை விக் வைத்து ஜெய்சங்கர் சி.ஐ.டியாகவும் ஜேம்ஸ் பாண்ட் ஆகவும் நடித்த பல படங்களுக்கு வேதா-தான் ஆஸ்தான இசையமைப்பாளர். இவருடைய 'இறக்குமதி தர' இசைக்கு அந்த நாட்களில் ஒரு பெரிய இரசிகர் பட்டாளமே இருந்தது. வேதா மாத்திரம் இல்லாமல் போயிருந்தால் உலக அளவில் நடந்துகொண்டிருந்த இசை முயற்சிகள் தமிழனுக்குத் தெரியாமலேயே போயிருக்கும். பின்னால் நிறைய வருடங்கள் கழித்து இதே சமூக சேவையில் ஈடுபட வேதாவின் பெயரையே நேரடியாக எடுத்து (கொஞ்சம் மாற்றிப் போட்டு) தேவா என்று ஒருவர் வந்து வேதா இல்லாத குறையைப் போக்க வேண்டியிருந்தது.

**- வெங்கட்**

பின்-நவீன இசை என்பது - நவீனத்துவத்தின் தொடர்ச்சி அல்ல. ஆனால் நகை முரண் கொண்டது. கால வித்தியாசங்களைக் கலைப்பது. உயர் கலை, தாழ் கலை என்ற பேதங்களை ரத்து செய்கிறது. மரபார்ந்த இசை வடிவத்தின் அமைப்பை (Structure) கேள்வி கேட்கிறது. மொத்தப் படுத்தலை (Totalising) நிராகரிக்கிறது. துண்டாடுதலையும் தொடர்ச்சியின்மையையும் கொண்டாடுகிறது.

மேற்கண்ட 'குணாம்சங்கள்' நம் ஊர் ஏ.ஆர்.ரஹ்மான், ஹாரிஜ் ஜெயராஜ் போன்றோரின் இசையில் காண முடியும் என்பது ஓர் ஆச்சர்யம் தரும் உண்மை.

**- எம். ஜீ. சுரேஷ்**

ஏ.ஆர்.ரஹ்மானின் மேதைமை அவரது மெல்லிசை மெட்டுகள் சார்ந்த கற்பனையிலும் அலாதியான தாள உணர்விலும் மட்டும் இல்லை. அவரது ஒலிப்பொறியியல் தேர்ச்சியையும் எடுத்துச் சொல்லியாக வேண்டும். அவருடைய பல பாடல்கள் முதலில் கேட்டால் சாதாரணமாகத் தோன்றும். தொடர்ந்து கேட்கக் கேட்க அவை மேலும் மேலும் விரிவடைந்து நுட்பங் காட்டி வளர்ந்தபடியே செல்லும். புதுமையான கருவியிசை இடையீடுகள், வழக்கத்தை மீறிய இசையொருமைகள், நுட்பமாக மாறுபடும் தாள அமைப்புகள், படைப்பூக்கத்துடன் பதிவு செய்யப்பட்ட குரல்கள் ஆகியவற்றின் மூலம் ஏ.ஆர்.ரஹ்மான் அதை நிகழ்த்துகிறார்.

**- ஷாஜி**

ட்யூன் கம்போஸ் செய்யும்போதும் சரி, நொட்டேஷன் எழுதும்போதும் சரி, பின்னணி இசை அமைக்கும்போதும் சரி, அவர் வந்தார், வென்றார், சென்றார் என்ற மாயக்கனவாய் எல்லாம் நடந்தேறும். உள்ளே வருவார். டிக்டேட் செய்ய ஆரம்பிப்பார். எல்லாம் சொல்லி முடித்ததும் புதிதாக வேறொன்று தோன்றும். இசைக் கோர்வைகள் வெள்ளமாக வரும். அவர் மனோவேகத்திற்கே அவரால் சிலசமயம் எழுத முடியாது. மறுபடி புது நொட்டேஷன். புதிய டிக்டேஷன். புயலைப் போல சுழல்வார். ஸ்வரங்கள் சொல்வார். வாசித்துக் காட்டுவார். பாடிக் காட்டுவார். அபஸ்வரமோ தவறுதலோ நிகழ்ந்தால் முகம் இறுக்கமாகி கோபம் கொப்பளிக்கும். ஒரே நேரத்தில் நாலைந்து பேருக்கு கட்டளைகள் பறக்கும். என்ன நடக்கிறது என அங்குள்ளவர்களுக்கே பலசமயம் புரியாது. வாத்தியங்களை ஒவ்வொன்றாக வாசிக்கச் சொல்லி கேட்பார். ஓகே ஓகே டேக். முப்பது விதவித ஒலிகள் கேட்டாலும் ஒரு புல்லசையும் சத்தமும் அவருக்குத் தனியாகக் கேட்கும்.

முனைப்பின்றி எழுந்த இசைக்கோலங்கள் எவ்வளவு, எழுதிக் காட்டிய கீர்த்தனங்கள் எவ்வளவு, பாடாமல் விட்ட பல்லவிகள் எவ்வளவு, எழுதாமல் விட்ட தில்லானாக்கள் எவ்வளவு, தாளாய் உதிரும் முத்தாய் ஸ்வரங்கள் எவ்வளவு, சிந்திச் சிதறிய ஜுகல் பந்திக்ள் எவ்வளவு. இளையராஜா நம் காலத்தின் வரம்.

**- ரவி சுப்ரமணியன்**

எத்தனை பாடல்களில் அவர் என் நெஞ்சை உருகவைத்து மெய் மறக்கச் செய்திருக்கிறார்! அவரது ஒவ்வொரு பாடலும் விலைமதிக்க முடியாத ரத்தினங்கள் அல்லவா? இசை வழியாக நான் எதையாவது அடைந்திருக்கிறேன் என்றால் அதை நான் எம். எஸ். வியின் பாதங்களில் காணிக்கையாக்குகிறேன்.


**- இளையராஜா**

இசை ஒரு பௌதீக நிகழ்வுதான். காதுகளில் புகுந்து, நரம்புகளைத் தூண்டி, மூளையில் மின்-ரசாயன அலைகளை உருவாக்கி, ரத்த ஓட்டத்தை பாதித்து, தசைநார்களை அதிரச் செய்து அது தன் பாதிப்பை நிகழ்த்துகிறது. இந்தக் கலையின் அற்புதகரமான வித்தை அந்த பௌதீகமான பாதிப்பை அது பௌதீகத் தளங்களுக்குக் கொண்டுசெல்கிறது என்பதே. அது நம்மைக் கவர்கிறது, ஆறுதல்படுத்துகிறது, நுண்ணிய ஆழங்களுக்குக் கொண்டுசெல்கிறது. நிச்சயமாக அது பண்பாட்டு எல்லைகளை மீறிய ஒன்றுதான்.

**- கார்ல் சேகன்**

# வவுனியா நகரசபையை மாநகரசபையாக தரமுயர்த்துவதற்கு முயற்சி எடுக்கப்படும்

## புதிய தலைவர் கனகையா கூறுகிறார்



(வவுனியா)

வவுனியா நகர சபையை ஒரு மாநகர சபையாக தரம் உயர்த்தவேண்டும் என்பது எல்லோருடைய விருப்பமுமாகும். இந்த எண்ணத்தை நிறைவேற்ற என்னாலான நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் என நகர சபையின் புதிய தலைவர் ஐ.கனகையா குறிப்பிட்டார்.

வவுனியா நகர சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஐ.கனகையா நேற்றுமுன்தினம் நகர சபை மண்டபத்தில் உத்தியோகபூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்று பின் உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வவுனியா நகர சபையில் 90 நாள் வேலைத்திட்டத்தினை ஆரம்பித்துளோம். முதல் கட்டமாக 11 வட்டாரங்களிலும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். இந்தத் திட்டத்திற்கு சபையின் நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

நகரசபை எல்லைக்குள் 32 வீதிகளைப் புனரமைக்கும் வேலைத்திட்டத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வீதி விளக்குகள் பொருத்துதல், அன்றாட கழிவுகளை துரிதமாக அகற்றல், கட்டாகாலி கால்நடைகளுடைய தொல்லைக்கு முற்றுப்புள்ளியிடல்,

நகர அங்காடி வர்த்தகர்களை ஒரு கட்டமைப்பின் கீழ் கொண்டுவந்து அவர்களுக்கு ஒரு இடம் தெரிவு செய்து வியாபாரத்திற்கு அனுமதிப்பது பற்றியும் கூடிய விரைவில் நல்ல தீர்மானங்கள் எடுக்கப்படும்.

இதேவேளை, வவுனியா நகர சபையின் உறுப்பினர்களின் சிந்தனையில் உருவான அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார்.

## கண்ணிவெடி குறித்து விளக்கமளிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு நிலக்கண்ணி வெடி குறித்து விளக்கமளிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. யுத்தம் இடம்பெற்ற வலயப் பாடசாலைகளின் பாடவிதானத்தில் நிலக்கண்ணிவெடி குறித்த பாடமும் இணைக்கப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது. சில ஆண்டுகளுக்கு இந்தப் பாடம் நடைமுறையில் இருக்கும் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நிலக்கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனெனில், நிலக்கண்ணி வெடிகளினால் இளம் தலைமுறையினர் பாதிப்புக்களை எதிர்நோக்கக் கூடிய அபாயம் அதிகளவில் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்த வலயத்தில் 62 வீதமான பிரதேசங்களில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# வடபகுதி ரயில்பாதை புனரமைப்பு; துரிதப்படுத்துவதற்கு விசேட திட்டம்

(கொழும்பு)

வடபகுதி ரயில் பாதை நிர்மாணப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு ரயில்வே திணைக்களம் விசேட திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வடபகுதி ரயில் பாதையில் ஒவ்வொரு புதிய ரயில் நிலையம் திறக்கப்படவுள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவையை விரிவுபடுத்தும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் எதிர்பார்த்ததைவிட மிக குறுகிய காலத்தில் வடபகுதி ரயில் பாதையில நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பரவுகின்றது கண்நோய்

(கொழும்பு)

'அடினோ' வைரஸினால் பரவக்கூடிய கண் நோய் தொடர்ந்தும் பரவிச் செல்வதாக தேசிய கண் மருத்துவமனை எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாளாந்தம் நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துச் செல்வதாகவும், கண் மருத்துவமனையின பணிப்பாளர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இவ்வாறான வைரஸ் தொற்றுக்களில் இருந்து பாதிப்புகளை கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரமான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் துரித வைத்திய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

# புதிய வகைப் போதைப் பொருளுடன் மன்னாரில் ஆறு பேர் கைதாகினர்

(மன்னார்)

மன்னார் பிரதேசத்தில் ஒரு வகைப் போதை பொருளுடன் கைது செய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களையும் தடுத்து வைக்கும் உத்தரவின் பேரில் விசாரணைக்கு உட்படுத்திவருவதாக பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தப் போதைப் பொருளை முதற் தடவையாக இலங்கைக்கு அறிமுகப்படுத்த முயற்சித்துள்ளமை விசாரணைகளின் மூலம் உறுதி செய்யயப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து மன்னார் ஊடாகக் கொண்டுவரப்பட்ட இந்தப் போதைப் பொருள் ஊசிகள் மூலம் உடலுக்குள் செலுத்தக்கூடிய வகையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுமார் 800 கிராம் போதைப் பொருளை 12 இலட்சம் ரூபாவுக்கு விற்க முயன்ற போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் போதைப் பொருள் பிரிவு அறிவித்துள்ளது.

சந்தேகநபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது கிடைத்த தகவல்களுக்கு அமைய புத்தளம் பகுதி வீடொன்றில் இருந்து மேலும் ஒரு கிலோகிராம் போதைப் பொருள கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# உயர்தரப் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிகள் பாதிப்படையாது

## கல்வி அமைச்சர் அளிக்கிறார் உறுதி



(கொழும்பு)

மனித வாழ்க்கை தொடர்பான புரிந்துணர்வுள்ள ஆசிரியர்களுக்கு மாத்திரம் பரீட்சை விடைததாள் திருத்தும் பணிகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்ட ஆசிரியர் மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் நடத்தப்படவுள்ள உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தல் பணிகளில் இருந்து விலகி தொழிற்சங்க போராடத்தில் ஈடுபட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

எவ்வாறாயினும், உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் இடைநிறுத்தப்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

தமது தொழிற்சங்க போராட்டம் குறித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தமக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சட்டவிரோத மின்சாரப் பயன்பாடு; கடந்த மாதம் 20 மில்லியன் அபராதம்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றமை, மின்விநியோகம் துஷ்பிரயோகம் ஆகியவற்றில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் 20 மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் மின்சார சபையின் விசேட பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 228 பேர் மின்மானியில் மோசடி செய்தமை கண்டுபிடிக்கப்பட்டதுடன், 122 பேர் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களிடமிருந்து மின்சார சபையால் ஒரு கோடியே 97 இலட்சத்து 87 ஆயிரத்து 155 ரூபா அபராதமாகவும், நீதிமன்றினால் 37 இலட்சத்து ஐயாயிரம் ரூபா அபராதமாகவும் விதிக்கப்பட்டுள்ளது.

மின்விநியோக மோசடி தொடர்பான தகவல்கள் தெரிந்தால் 1987 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு மக்கள் அறிவிக்கலாம் எனவும் மின்சாரசபை தெரிவித்துள்ளது.

# உல்லாசப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் யூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் யூன மாதம் இலங்கைக்கு வந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாக, உல்லாசப் பயணத்துறைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த வருடம் யூன் மாதம் இலங்கைக்கு 44 ஆயிரம் பேர் உல்லாசப் பயணிகளாக வருகைதந்தனர். ஆனால் இந்த வருடத்தில் கடந்த யூன் மாதம் இது 53 ஆயிரமாக அதாவது இருபது வீதத்தால் அதிகரித்துள்ளது.

உல்லாசப் பயணிகளில் பெருமளவானோர் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாக உல்லாசப் பயணத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# வடக்கின் துரித மீட்சித்திட்ட அலுவலகம் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டது



(மன்னார்)

மன்னார் மாவட்ட செயலக வளாகத்தினுள் சுமார் 5 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட வடக்கின் துரித மீட்சித்திட்ட காரியாலயம் நேற்றுமுன்தினம் காலை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் .என்.வேதநாயகம், வடக்கின் துரித மீட்சித்திட்டப் பணிப்பாளர் சிவகுமாரன் ஆகியோர் இணைந்து நாடவை வெட்டித் திறந்து வைத்தனர்.

மேற்படி நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளரும் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் பிரதித்திட்ட பணிப்பாளருமான ஸ்ரான்லி டி மெல், மன்னார் உதவி அரசாங்க அதிபர் மேகநாதன் உட்பட திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# மானிப்பாயில் வீதி திறப்பு மக்களின் போக்குவரத்து ஆரம்பம்

## திறந்து வைத்தார் அமைச்சர் டக்ளஸ்



மானிப்பாய் சந்தியில் அமைந்துள்ள இராஜகாரியர் வீதியை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மக்கள் பாவனைக்காக நேற்றுத் திறந்து வைத்துள்ளார்.

மானிப்பாய் சந்தியிலிருந்து சங்குவேலிக்குச் செல்லும் சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் நீளமான இந்தப் பாதை கடந்த பல ஆண்டு காலமாக இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த காரணத்தினால் அப்பாதை ஊடான பொதுமக்களின் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. இந்த நிலையில் இப்பாதை திறப்பு சம்பந்தமாக மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பெரும் முயற்சியின் பயனாக இந்தப் பாதை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பாதையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்ததுடன் அந்தப் பாதை ஊடான பொதுமக்களின் போக்குவரத்தை சம்பிரதாயப் பூர்வமாக தொடக்கிவைத்தார்.

## ஆதிவாசி மரணம்

ஆதிவாசிகள் குழுக்களுக்கிடையில் குடும்பப் பிரச்சினையொன்று வாய்த்தர்க்கத்தில் ஆரம்பித்து அடிதடியில் முடிவுற்றது. ஆதிவாசியொருவர் மற்றையவரைக் கால், கை போன்றவற்றால் தாறுமாறாகத் தாக்கியதன் காரணமாகப் பலத்த காயங்களுக்குள்ளான 42 வயதுடைய மகியங்கனை தம்பான பிரதேசத்தைச் சேர்ந்த உனாபானவரிகே குணதிலக என்ற ஆதிவாசி மகியங்கனைப் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பயனளிக்காததன் காரணமாக உயிரிழந்துள்ளார்.

கொலைக்குக் காரணமான ஆதிவாசி சமூகத்தைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இக்கொலை சம்பந்தமாக மகியங்கனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (92)

# பஸ் பயணத்தில் பாலியல் தொல்லை



பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் பயணம் செய்யும் பெண்களில் நான்கில் ஒருவர் பாலியல் ரீதியான தொந்தரவுக்கு உள்ளாவதாக போக்குவரத்து அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

ஆய்வொன்றின் மூலம் இவ்விபரம் தெரியவந்துள்ளதாக போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹன திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் குறித்து முக்கியமாகத் தெரிவித்துள்ள விடயங்கள் வருமாறு,

பஸ்களில் தினமும் பெரும் எண்ணிக்கையான பெண்கள் வார்த்தைகளாலும் உடல்ரீதியாகவும் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர். அண்மைக் காலத்தில் பொதுப்போக்குவரத்து சேவைகளில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைவதற்கு இதுவும் ஒரு காரணமாக உள்ளது.

பெண்கள் தமது அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதை உறுதிப்படுத்துவதற்கும் பொதுப் போக்குவரத்துத்துறை வீழ்ச்சியடையாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் இவ்விவகாரத்திற்கு தீர்வு காணப்படவேண்டும்.

பஸ்களில் பெண்கள் தொந்தரவுக்குள்ளாகாமல் பயணம் செய்வதற்கேற்ற சிறந்த சேவைகளை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து அறிவுறுத்துவதற்காக தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதிகள், நடத்துநர்களுக்கு அடுத்த மாதம் முதல் புதிய செயற்திட்டங்கள், பயிற்சிப்பட்டறைகள் நடத்தவுள்ளோம்.

எதிர்காலத்தில் ரயில்வே துறையினருக்கும் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதேநேரம், பஸ், ரயில்களில் தொந்தரவுக்குள்ளாகும் பயணிகள் 011-7555555 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் முறைப்பாடு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### வெளிவாரிப்...

"உயர்கல்வி அமைச்சரினதும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் முரண்பாடான அறிக்கைகள் காரணமாக நாடெங்குமுள்ள பல்கலைக்கழகங்களில் வெளிவாரி பட்டப்படிப்பு முறைமையின் ஸ்திரத்தன்மை நிச்சயமில்லாதுள்ளது" எனவும் அவர் கூறினார்.

### யாழ்.செயலக...

மாற்றலாகிச் சென்றுள்ள நிலையில் மீண்டும் கடந்த சனிக்கிழமை முதல் அரசாங்கத் தகவல திணைக்களத்தின் விசேட ஊடகப்பிரிவு அங்கு செயற்பட ஆரமபித்துள்ளதாக அவ் அதிகாரி தெரிவித்தார். இவ் அலுவலகத்தில் சுனகிர் சரீப், எம்.ஜே.எம்.தாஜிதீன் ஆகிய இரு ஊடகப் பிரிவு அலுவலர்கள கடமையிலீடுபட்டுள்ளனர். (பா)

### பாடவிதானத்தில்...

படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் நிலக்கண்ணி வெடிகளினால் இளம் தலைமுறையினர் பாதிப்புக்களை எதிர்நோக்கக் கூடிய அபாயம் அதிகளவில் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. யுத்த வலயத்தில் 62 வீதமான பிரதேசங்களில் நில கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

### அமைச்சர் பசில்...

பாடசாலை உபகரங்களை வழங்கல், சுயதொழில் கடன் வழங்கல், வாழ்வாதார உதவிகளை வழங்கல், வறிய மாணவர்களுக்கான "சிப்தொற" புலமைப் பரிசில் வழங்கல், மலசலகூட வசதியற்ற வறிய மாக்களுக்கான கட்டுமானப் பொருட்களை வழங்கல் போன்ற பல்வேறு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதேவேளை யாழ்.மாவட்டத்தில் ஏனைய பகுதிகளிலும் இவ வாறான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைக்கவுள்ளார். இந்த நிகழ்வுகளில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (26)

### வானொலி ...

வழிசெய்யும முகமாகவும் இத் தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்படவுள்ள தாகவும் தெரியவருகின்றது. இவ்விடயம தொடர்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கட்சன் சமரசிங்க மற்றும் முன்னாள் பொறியியலாளர் டயனஸ் பின்போ ஆகியோர் யாழ் அரச அதிபர திருமதி இமெல்டா சுகுமாரை யாழ் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இச் சந்திப்பில் கோப்பாய்ப் பிரதேச செயலர் ம.பிரதீபனும் கலந்துகொண்டார்.

ஏற்கனவே மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் மண்டைதீவுப் பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையமொன்று செயற்பட்டுவந்தமையும் யுத்த சூழ்நிலைகள் காரணமாக அது அழிவடைந்து போயிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# மண் அகழ்வு தடுத்து நிறுத்தம்

(அம்பலப்பெருமாள்)

அக்கராயன் குளத்தின் இடது, வலது கரை வாய்க்கால்களுக்கு இடையில் ஓடும் பிரதான ஆற்றுப் பகுதியில் இடம்பெற்று வந்த சட்டவிரோத மணல் அகழும் பணிகள் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஆற்றுப் பகுதியையும் அதனை அண்டிய காணிகளிலும் தொடர்ச்சியாக மணல் அகழும் பணிகள் நடைபெற்று வந்தமை தொடர்பாக இப்பிரதேச மக்களினால் வழங்கப்பட்ட தகவலை அடுத்து மணல் அகழும் பணிகள் இராணுவத்தினரால் தடுக்கப்பட்டது.

இதேவேளை முன்னர் தொடர்ச்சியாக இப்பகுதியில் மண் அகழும் பணிகள் நடைபெற்று வந்ததன் காரணத்தால் அக்கராயன் மத்திய பகுதியில் உள்ள கிணறுகளின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளதாகக் கிராம அபிவிருத்தி ஆர்வலர்களினால் கவலை தெரிவிக்கப்படுகிறது. (121)

# பாலியல் துஷ்பிரயோகம் சந்தேக நபருக்குச் சிறை

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் பாடசாலைச் சிறுமி ஒருவரைப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட மேற்படி சந்தேகநபரை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (110)

# மாணவர்களுக்கு வங்கிக் கணக்கு




(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலய மாணவர்கள் 500 பேருக்கு பழைய மாணவர் சங்கத் தலைவர் அ.விஜயகாந் யாழ். வரத்தன வங்கியில் வங்கிக் கணக்குகளை நேற்று ஆரம்பித்து வைத்ததுடன் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 100 ரூபாய் வீதம் வைப்புச் செய்துள்ளார்.

யாழ்.வர்த்தன வங்கி முகாமையாளர் வே.ஞானகரன் குறித்த பாடசாலைக்கு விஜயம் செய்து மாணவர்களுக்கான வங்கிக் கணக்குகளை ஆரம்பித்துவைத்தார். இந்நிகழ்வில் வர்த்தன வங்கி முகாமையாளர் மற்றும் வங்கி ஊழியர்கள், பழைய மாணவர் சங்கத் தலைவரும், யாழ்.மாநகரசபை உறுப்பினருமான அ.விஜயகாந் பழைய மாணவ சிரேஷ்ட தலைவர் ஜெயபாலசிங்கம், மற்றும் பாடசாலை மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டார்கள். வங்கிப் புத்தகங்களை வர்த்தன வங்கி முகாமையாளர் வே.ஞானகரன் மாணவர்களுக்கு வழங்கினார். (எஸ்)

### செய்திப்பரணம்

**ஆடு, மாடு வீடுகளில் ஆர்வளர்ப்பர் கட்டியாம்**
**தேடுவார் இல்லாமல் தெருக்களில் - ஊடுருவும்**
**போக்குவரவு வாகனங்கள் போட்டியிட தாச்சியாடி**
**நாக்கிழுத்துக் கிடப்பராம் நாள்!**



# பெண்கள் மீது பாலியல் வன்முறை தடுத்து நிறுத்த புதிய பொறிமுறை

LEGAL AID COMMISSION OF SRI LANKA
ශ්‍රී ලංකා නීති ආධාර කොමිෂන් සභාව
இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் குறித்து யாழ். நீதிமன்றங்களில் யாரும் எந்தவொரு முறைப்பாட்டையும் நேரடியாகக் கொண்டுவருவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

குடாநாட்டில் அண்மைக் காலத்தில் திடீரென அதிகரித்துள்ள பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களை அடுத்து குடும்பத்திலோ அல்லது வேறு எந்த இடத்திலும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள், துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றால், அவை குறித்து நேரடியாகவே நீதிமன்றுக்கு முறைப்பாடு செய்யும் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

சட்ட உதவி ஆணைக்குழுத் தலைவர் நீதியரசர் என்.கே. உடலகம மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களுடன் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா நடத்திய கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய முறைப்பாடுகள் சம்பந்தமாக பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தற்போது கலாசாரச் சீரழிவுகள், பாலியல் பலாத்காரங்கள் தலைதூக்கி உள்ளதை அவதானிக்க முடிகின்றது. எனவே இவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்தும் முகமாக பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகள் மற்றும் பாலியல் துன்புறுத்தல், பலாத்காரம் தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்றும் அதற்கு சட்ட உதவி ஆணைக் குழுவின் உதவியை நாடமுடியும் என்றும் நீதியரசர் உடலகமவுடனான சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் சாவகச்சேரி நீதிமன்றின் ஓர் அங்கமாக இலவச சட்ட உதவிமன்றம் மற்றும் சமுதாய சீர்திருத்தப்பிரிவு ஆகியன ஆரம்பிக்கப்பட்டு செயற்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



ஈ.பி.ஆர்.எல்.எப் முன்னாள் உறுப்பினர் ராஜி அக்காவின் தந்தையும் ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணியின் தலைவர் சிறிதரனின் மாமனாருமாகிய உரும்பிராயைச் சேர்ந்த அமரர் நடராசாவின் பூதவுடலுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று அஞ்சலி செலுத்தினார்.

## சமூக நல்லிணக்கத்துக்கான நிலைத்து நிற்கும் கல்வி

### அதிபர்களுக்கு விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

'சமூக நல்லிணக்கத்துக்கான நிலைத்து நிற்கும் கல்வி' என்னும் செயற்திட்டம் தொடர்பாக பாடசாலை அதிபர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு யாழ். வலயகல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவிருப்பதாக யாழ். வலயகல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

இச்செயலமர்வுக் கூட்டம் அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணிவரை நடைபெறும் என வலயகல்வி அலுவலக வட்டாரம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, அதிபர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு செயற்திட்ட கூட்டத்திற்கு அறிவிக்கப்பட்ட 25 பாடசாலை அதிபர்களும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென யாழ். வலயகல்வி அலுவலகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எஸ்)

## ஆசிரியர் பற்றாக்குறை தீர்வு கிடைப்பது எப்போது

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாக துணுக்காய் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களின் பற்றாக்குறை காரணமாக ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலும், மல்லாவி மத்திய கல்லூரியிலும் நடைபெறும் உயர்தர விஞ்ஞானப் பிரிவு வகுப்புக்களை இயக்க முடியாதிருப்பதாகத் தெரிவித்ததுடன், உடனடியாக 5 விஞ்ஞான ஆசிரியர்கள், 5 கணித ஆசிரியர்கள், 10 ஆங்கில ஆசிரியர்கள், இந்த வலயத்திற்கு பணிக்காக நியமித்தால் ஆசிரியர்கள் பற்றாக் குறையைத் தீர்த்துக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (121)

## வினைத்திறன் பரீட்சை

(யாழ். நிருபர்)

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படவுள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 2011.08.05 என திறைசேரியின் பிரதிச் செயலாளர் அறிவித்துள்ளார். (10)

## தென்மராட்சிக்கு ஆளுநர் விஜயம்

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நேற்று சாவகச்சேரி நகரப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு தென்மராட்சியிலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரைச் சந்தித்து உள்ளூராட்சி மன்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும் மக்களின் தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பின் போது பொது மக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோள்களை ஏற்றுக் கொண்ட ஆளுநர், இது தொடர்பாக திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்வுத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு உத்தரவிட்டதுடன், சனசமூக நிலையக் கட்டடங்களை கட்டுவதற்கான உதவிகள் விரைவாக செய்து தரப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பொதுமக்கள் சிலர் வீட்டுத்திட்டம், மலசலகூட வசதிகள் இல்லையெனத் தெரிவித்ததையடுத்து உடனடியாக அவற்றை செயற்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

ஆளுநருடன் சாவகச்சேரி நகரசபைச் செயலாளர், பிரதேச சபைச் செயலாளர், தென்மராட்சி பிரதேச சபைச் செயலாளர், தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (11)

## கிழக்கின் யுத்த விதவைகளுக்கு இந்தியாவில் தொழிற் பயிற்சி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தால் விதவைகளாக்கப்பட்ட 40 பெண்கள் இந்தியாவில் சுய தொழில் பயிற்சி வழங்குவதற்காக "சேவா" எனப்படும் சுயதொழிலில் ஈடுபடும் பெண்களுக்கான அமைப்பினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்தெரிவினை இலங்கை வந்துள்ள சேவா நிறுனத்தின் சிரேஷ்ட இணைப்பாளர் உமா தேவி தலைமையிலான தூதுக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட பெண்கள் மிக விரைவில் இந்தியா சென்று ஆடைத்தொழில், கணினி, கைப்பணி பொருட்கள், உணவு பதனிடலும் கால்நடை வளர்ப்பும் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி போன்ற ஏழு துறைகளில் மூன்று மாத கால பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சியை பெறவுள்ளனர்.

இந்தத் திட்டத்திற்காக இந்திய அரசாங்கம் 203 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது. இந்தியாவில் பயிற்சி பெற்று வரும் 40 பெண்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட் 1,000 யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சுயதொழில் பயிற்சிகள் வழங்கவுள்ளனர்.

29 மாதங்களை கொண்ட இந்த செயற்திட்டம் கிழக்கு மாகாண சபை, சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு, இந்திய அரசு சார்பாக இந்தியாவின் சேவா நிறுவனம் ஆகியன இணைந்து மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## அமிர்தலிங்கத்தின் சிரார்த்த தினம் இன்று



(வவுனியா)

புலிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் 22 ஆவது சிரார்த்த தினம் இன்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்படவுள்ளது

1989 ஆம் ஆண்டு யூலை 13 ஆம் திகதி இரவு கொழும்பில் வைத்து அமிர்தலிங்கமும் முன்னாள் யாழ். எம்.பி வீ.யோகேஸ்வரனும் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவத்தில் கூட்டணியின் தலைவர் எம்.சிவசிதம்பரம் காயமடைந்திருந்தார்.

இன்றைய நினைவு தினக் கூட்டத்தை அமைதியான முறையில் நடத்தத் தீர்மானித்துள்ளோம் என கிளை தலைவர் டேவிட் நாக நாதன் தெரிவித்தார்.

அதேவேளை புளொட் அனுஷ்டிக்கும் வீரமக்கள் தின நிகழ்வு இன்று முதல் ஆரம்பித்து 16 ஆம் திகதி நிறைவு பெறும். 1989 ஆம் ஆண்டு ஜூலை இத்தினத்தில் தான் புளொட் செயலதிபர் உமா மகேஸ்வரன் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

விடுதலைப் போராட்ட காலத்தில் மறைந்த தமிழ்த் தலைவர்கள், போராளிகள், பொதுமக்களை நினைவு கூர்ந்து வீரமக்கள் தினம் வருடாந்தம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. (39)

## பாசிக்குடா அபிவிருத்தி கடற்தொழிலைப் பாதிக்காது

### அமைச்சர் பசில் உறுதிமொழி

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் ஒருபோதும் மீன்பிடித் தொழிலை பாதிக்காது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாசிக்குடா பகுதியில் சுற்றுலாத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் மீன்பிடித் துறைக்குப் பாதிப்பு ஏற்படும் என சிலர் தவறான பரப்புரைகளை செய்து வருவதாக அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும் எனக் கூறிய அமைச்சர், பாசிக்குடா திட்டத்தின் ஊடாக அனேகமானவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## சுமுகமாக நடைபெற்றது தபால் மூல வாக்களிப்பு

(கொழும்பு)

65 உள்ளூராட்சி சபைகளுக்கான தபால் மூல வாக்களிப்புகள் நேற்று நடைபெற்றது. இம்முறை தபால் மூல வாக்களிப்பிற்காக 60 ஆயிரத்து 643 அரச ஊழியர்கள் தகுதி பெற்றிருந்தனர்.

ஒரு மாநகர சபை, 9 நகர சபைகள், 55 பிரதேச சபைகள் அடங்கலான 65 உள்ளூராட்சி சபைகளுக்கு இந்த தபால்மூல வாக்களிப்புகள் இடம்பெற்றன.

நாட்டிலுள்ள 28 பொலிஸ் பிரிவுகளிலுள்ள 108 பொலிஸ் நிலையப் பகுதிகளிலேயே இந்த வாக்களிப்பு நடைபெற்றது. காலை 8.30 மணிக்கு வாக்குப் பதிவுகள் ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு நிறைவடைந்தது.

இந்தத் தேர்தலில் 20 அரசியல் கட்சிகள் மற்றும் 72 சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த 5,619 பேர் வேட்பாளர்களாக போட்டியிடுவதாக தேர்தல் செயலகம் ஏற்கனவே அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.